 011757

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

| | |
|---|---|
| ගිණුම්කරණය | I |
| கணக்கீடு | I |
| Accounting | I |

**33 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் **சமமான** புள்ளிகள் உரித்தாகும்.
- உங்கள் **சுட்டெண்ணை** மேலே கொடுக்கப்பட்டுள்ள கூட்டினுள் தெளிவாக எழுதுக.
- **செய்நிரலாக்கத்தகா (Non-Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.**

சுட்டெண் : ..................................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மாத்திரம்

| | ஒப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

| வினாத்தாள் I இற்கானது | |
|---|---|
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

**1.** பின்வரும் கூற்றுக்களுள் எது கணக்கீட்டின் பிரதான நோக்கத்தைச் மிகச் **சிறப்பாக** விபரிக்கின்றது?
(1) நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதற்காக கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல்
(2) சட்டத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்குப் பொது நோக்கத்துக்கான நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல்
(3) அக்கறையுடைய தரப்பினர்களுக்கு தீர்மானம் எடுப்பதற்காக நிறுவனம் பற்றிய தகவல்களை வழங்குதல்
(4) நிறுவனமொன்றைப் பற்றிய தகவல்களை அதன் முகாமையாளர்களின் பயன்பாட்டுக்காக அறிக்கையிடல்
(5) நிறுவனமொன்றின் வருடாந்த வெளியகக் கணக்காய்வுக்காக நிதிக்கூற்றுகளினூடாகத் தகவல்களை வழங்குதல் (......)

**2.** பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களுள் எது நிறுவனமொன்றின் நிதிநிலைமைக்கூற்றில் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் நடைமுறை மற்றும் நடைமுறையில்லாதது என வகைப்படுத்துவதற்கான **அடிப்படையை** வழங்குகிறது?
(1) அட்டுறு (2) மாறாத்தன்மை (3) தொடர்ந்து இயங்குதல்
(4) பொருண்மை (5) கால அளவு (......)

**3.** பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களுள் எது குத்தகையாளனின் நிதிநிலைமைக்கூற்றில் சொத்துப்பாவனை உரிமையினை இனங்காண்பதற்கான **அடிப்படையை** வழங்குகின்றது?
(1) அலகுசார் (2) மாறாத்தன்மை
(3) கால அளவு (4) தோற்றத்திலும் பார்க்கக் கருத்து முக்கியத்துவம்
(5) பாதுகாப்பு (......)

- **4, 5, 6 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

மிதிலா என்பவர் ரூ. 500 000 காசையும் ரூ. 400 000 பெறுமதியான தளபாடங்களையும் முதலீடு செய்து 01.01.2023 இல் வியாபாரமொன்றை ஆரம்பித்தார். இவ்வியாபாரமானது இத்திகதியில் பெறுமதி சேர் வரிக்காகப் (VAT) பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் கொள்வனவுகளுக்கு VAT இல்லை எனக் கருதுக.

பின்வரும் கொடுக்கல் வாங்கல்களானது 2023 ஜனவரி மாதத்தில் இடம்பெற்றுள்ளன.

| கொடுக்கல் வாங்கல் இல. | திகதி | கொடுக்கல் வாங்கல் |
|---|---|---|
| 1 | 05.01 | ரூ. 400 000 கிரயமான பொருட்கள் "தர்ஷன் ரேடர்ஸ்" இடமிருந்து கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 2 | 08.01 | "தர்ஷன் ரேடர்ஸ்" இடமிருந்து கொள்வனவு செய்த ரூ. 30 000 பொருட்கள் திருப்பியனுப்பப்பட்டன. |
| 3 | 15.01 | ரூ. 250 000 கிரயமான பொருட்களானது ரூ. 345 000 காசுக்கு விற்கப்பட்டன (ரூ. 45 000 VAT உட்பட). |
| 4 | 22.01 | ரூ. 100 000 கிரயமான பொருட்களானது ரூ. 138 000 கடனுக்கு விற்கப்பட்டன (ரூ. 18 000 VAT உட்பட). |
| 5 | 25.01 | "தர்ஷன் ரேடர்ஸ்" இற்குச் செலுத்தவேண்டிய தொகையைத் தீர்ப்பதற்குக் காசோலையொன்று வழங்கப்பட்டது. |

[பக். 2 ஐப் பார்க்க

CamScanner

4. மிதிலா வியாபாரத்தின் புத்தகங்களில் 1, 2 மற்றும் 3 ஆம் இலக்க கொடுக்கல் வாங்கல்களை அவை நிகழும் ஒழுங்கில் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆவணங்கள் எவை?
(1) பட்டியல், வரவுத்தாள், பட்டியல்
(2) பட்டியல், செலவுத்தாள், பட்டியல்
(3) பட்டியல், வரவுத்தாள், பற்றுச் சீட்டு
(4) கொடுப்பனவு உறுதிச்சீட்டு, செலவுத்தாள், பற்றுச் சீட்டு
(5) கொடுப்பனவு உறுதிச்சீட்டு, நாட்குறிப்பிற்கான உறுதிச்சீட்டு, பற்றுச் சீட்டு (......)

5. மிதிலா வியாபாரத்தின் **ஆரம்ப முதலீட்டினையும்** 3 மற்றும் 5 ஆம் இலக்க கொடுக்கல் வாங்கல்களையும் அவை நிகழும் ஒழுங்கில் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பதிவேடுகள் எவை?
(1) காசுப் பெறுவனவு நாளேடு, பொது நாளேடு, விற்பனை நாளேடு, காசுக் கொடுப்பனவு நாளேடு
(2) காசுப் பெறுவனவு நாளேடு, பொது நாளேடு, விற்பனை நாளேடு, காசுப் பெறுவனவு நாளேடு
(3) பொது நாளேடு, காசுப் பெறுவனவு நாளேடு, விற்பனை நாளேடு, காசுக் கொடுப்பனவு நாளேடு
(4) காசுப் பெறுவனவு நாளேடு, பொது நாளேடு, காசுப் பெறுவனவு நாளேடு, காசுக் கொடுப்பனவு நாளேடு
(5) பொது நாளேடு, பொது நாளேடு, காசுப் பெறுவனவு நாளேடு, காசுப் பெறுவனவு நாளேடு (......)

6. பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாடுகளில் எது 3 மற்றும் 4 ஆம் இலக்க கொடுக்கல் வாங்கல்களின் **தேறிய தாக்கத்தினைப்** பிரதிபலிக்கின்றது?

| | சொத்துக்கள் (ரூ.'000) | = | பொறுப்புக்கள் (ரூ.'000) | + | உரிமையாண்மை (ரூ.'000) |
|---|---|---|---|---|---|
| (1) | + 70 | | + 63 | | + 7 |
| (2) | + 115 | | + 45 | | + 70 |
| (3) | + 133 | | 0 | | + 133 |
| (4) | + 133 | | + 45 | | + 88 |
| (5) | + 133 | | + 63 | | + 70 |

(......)

7. 31.03.2023 இல் முடிவடைந்த வருடத்துக்கான சமந்தி PLC இன் வரைபு நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள இலாபம் ரூ. 360 000 ஆகும். இந்நிதிக்கூற்றுகளைத் தயாரித்த பின்னர் பின்வரும் வழுக்கள் வெளிப்படுத்தப்பட்டன.

- இவ்வருடத்தில் மோட்டார் வாகனங்களை இரண்டாவது தடவையாக மீள்மதிப்பீடு செய்தபோது ஏற்பட்ட மிகை ரூ. 120 000 ஆனது ஏனைய வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. எனினும் இம்மிகையானது முன்னைய வருடத்தில் இம் மோட்டார் வாகனங்களுக்கு இனங்காணப்பட்டிருந்த மீள்மதிப்பீட்டுக் குறை ரூ. 80 000 ஐக் கருத்திற்கொள்ளாது கணக்கிடப்பட்டிருந்தது.
- பிரதியெடுக்கும் இயந்திரம் ஒன்றின் நடைமுறை வருடத்துடன் தொடர்புடைய பராமரிப்புச் செலவு ரூ. 30 000 ஆனது 01.04.2022 இல் செலுத்தப்பட்டிருந்தது. இது அலுவலக உபகரணங்கள் கணக்கில் வரவிலும், காசுக் கணக்கில் செலவிலும் பதிவு செய்யப்பட்டிருந்தது. அலுவலக உபகரணங்களின் வருடத்துக்கான பெறுமானத்தேய்வானது வருடத்துக்கு கிரயத்தில் 20% பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி வழுக்கள் திருத்தப்பட்ட பின்னர் 31.03.2023 இல் முடிவடைந்த வருடத்துக்கான **சரியான** இலாபம் யாது?

(1) ரூ. 216 000 (2) ரூ. 250 000 (3) ரூ. 256 000
(4) ரூ. 290 000 (5) ரூ. 296 000 (......)

8. "அருண் றேடேர்ஸ்" தனியுடமை நிறுவனமொன்றாகும். 31.03.2023 இல் முடிவடையும் வருட காலத்தில் நிறுவனத்தின் ரூ. 20 000 கிரயமுள்ள இருப்பொன்று முழுமையாக அழிவடைந்திருந்தது. இந்நட்டத்தில் 80% ஆனது காப்புறுதிக் கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பு நட்டம் மற்றும் காப்புறுதிக் கோரிக்கையிலிருந்து பெறப்பட்ட காசு தொடர்பான சீராக்கங்கள் கணக்குப் புத்தகங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும், 31.03.2023 இல் உள்ளவாறான இறுதியிருப்பானது கிடைக்கக்கூடிய பௌதீக இருப்பு அடிப்படையில் கணிக்கப்பட்டிருந்தது. 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபம் முறையே ரூ. 150 000 மற்றும் ரூ. 80 000 ஆக இருந்தன.

இருப்பு நட்டம் மற்றும் காப்புறுதிக் கோரிக்கையிலிருந்து பெறப்பட்ட காசு என்பன கணக்குப் புத்தகங்களில் சரியாகச் சீராக்கப்பட்டிருப்பின் **சரியான** மொத்த இலாபமும் தேறிய இலாபமும் யாது?

| | மொத்த இலாபம் (ரூ.) | தேறிய இலாபம் (ரூ.) |
|---|---|---|
| (1) | 146 000 | 76 000 |
| (2) | 150 000 | 84 000 |
| (3) | 166 000 | 76 000 |
| (4) | 170 000 | 76 000 |
| (5) | 170 000 | 96 000 |

(......)

[பக். 3 ஐப் பார்க்க



CamScanner

- **9, 10 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

உற்பத்தி நிறுவனமான அகல்யா PLC ஆனது 01.04.2022 இல் தனது செயற்பாடுகளைத் தொடங்கியது. பின்வரும் தகவல்கள் 31.03.2023 இல் முடிவடையும் வருடத்தில் இந்நிறுவனத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடையவை ஆகும்.

| | தொகை (ரூ.' மில்லியன்) |
|---|---|
| 01.04.2022 இல் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களின் கிரயம் (பாவனைக்காலம் 10 வருடங்களாகும்.) | 8 000 |
| கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்களின் கிரயம் | 5 500 |
| நேர்க்கூலிக்கிரயம் | 4 000 |
| உற்பத்தி மேந்தலைகள் (இயந்திரங்களின் பெறுமானத்தேய்வு நீங்கலாக) | 800 |

**மேலதிக தகவல்கள்:**

- கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்களில் 20% ஆனது 31.03.2023 இல் இருப்பாகவுள்ளது.
- நடைமுறை வேலையானது 31.03.2023 இல் ரூ. 450 மில்லியன் ஆக இருந்தது. நடைமுறை வேலையானது மூலக்கிரயத்தில் கணிக்கப்படுகிறது.
- இவ்வருடத்தில் ரூ. 550 மில்லியன் கிரயமான மூலப்பொருட்கள் முற்றாக அழிவடைந்திருந்தன.

**9.** 31.03.2023 இல் முடிவடைந்த வருடத்துக்கான மூலக்கிரயம் யாது?

(1) ரூ. 7 400 மில்லியன் (2) ரூ. 7 850 மில்லியன் (3) ரூ. 7 950 மில்லியன்
(4) ரூ. 8 200 மில்லியன் (5) ரூ. 8 950 மில்லியன் (......)

**10.** 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான மொத்த உற்பத்திக் கிரயம் யாது?

(1) ரூ. 9 000 மில்லியன் (2) ரூ. 9 200 மில்லியன் (3) ரூ. 9 450 மில்லியன்
(4) ரூ. 9 550 மில்லியன் (5) ரூ. 10 000 மில்லியன் (......)

- **11, 12 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

ஒரு தனியுடைமை வணிகமாகிய "பிரியா றேடேர்ஸ்" அதன் கணக்குப் பதிவேடுகளைச் சரியான முறையில் பேணவில்லை. இவ்வணிகத்துடன் தொடர்புடைய சில தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 31.03.2023 இல் (ரூ.'000) | 31.03.2022 இல் (ரூ.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கொண்டு செல் தொகை | 5 000 | 3 000 |
| இருப்பு | ? | 1 800 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 1 500 | 1 000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 1 200 | 800 |

31.03.2023 இல் முடிவடையும் வருடத்துடன் தொடர்புடைய செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 250 000 ஆனது இவ்வருட காலத்தில் காசாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இவ்வருடத்தில் ரூ. 3 000 000 ஆனது வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து சேகரிக்கப்பட்டிருந்ததுடன், வியாபாரக் கடன்கொடுத்தோருக்கு ரூ. 2 500 000 செலுத்தப்பட்டிருந்தது. எல்லா விற்பனைகளும், கொள்வனவுகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வருடத்தில் ரூ. 2 250 000 கிரயமுள்ள உபகரணமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் அகற்றல் எதுவும் இவ்வருடத்தில் இடம்பெற்றிருக்கவில்லை. நிறுவனம் பொருட்களை கிரயத்தில் 25% இலாபம் சேர்த்து விற்பனை செய்கிறது.

**11.** 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான விற்பனைக் கிரயம்:

(1) ரூ. 1 875 000 (2) ரூ. 2 000 000 (3) ரூ. 2 100 000
(4) ரூ. 2 625 000 (5) ரூ. 2 800 000 (......)

**12.** 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான தேறிய இலாபம் மற்றும் 31.03.2023 இலுள்ளவாறான இருப்பு:

| | தேறிய இலாபம் (ரூ.000) | 31.03.2023 இல் இருப்பு (ரூ.000) |
|---|---|---|
| (1) | 200 | 1900 |
| (2) | 200 | 2075 |
| (3) | 375 | 1900 |
| (4) | 375 | 2075 |
| (5) | 450 | 1900 |

(......)

**13.** 1890 பங்குடமைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்படி பின்வரும் கூற்றுகளில் எது/எவை **சரியானது/சரியானவை?**

A - அனைத்துப் பங்காளர்களும் இலாபங்கள் அல்லது நட்டங்களைச் சமமாகப் பகிர்வதற்கு உரித்துடையவர்கள்.

B - இளைப்பாறும் பங்காளரொருவர் இளைப்பாறும்போது அவருக்குக் கொடுக்க வேண்டிய தொகைக்கு வருடாந்தம் 5% வட்டியினைப் பெற உரித்துடையவர்.

C - ஒவ்வொரு பங்காளரும் பங்குடைமை வணிகத்தின் முகாமையில் பங்குபற்றலாம். ஆனால், இது தொடர்பில் ஊதியமொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவரல்லர்.

(1) A மாத்திரம் (2) A, B மாத்திரம் (3) A, C மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (......)

[பக். 4 ஐப் பார்க்க

011757

CamScanner

- **14, 15 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பிரியன், லவன், நிலான் ஆகியோர் இலாப நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து பங்குடமையொன்றினை நடத்தி வந்தனர். 01.04.2022 இலுள்ளவாறு பங்குடமையின் மூலதனம் மற்றும் நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் பின்வருமாறு இருந்தன.

| | பிரியன் (ரு.'000) | லவன் (ரு.'000) | நிலான் (ரு.'000) |
|---|---|---|---|
| மூலதனக் கணக்குகள் | 6 000 | 4 000 | 2 000 |
| நடைமுறைக் கணக்குகள்-செலவு | 800 | 600 | 400 |

பங்குடமை ஒப்பந்தத்தின்படி, ஒவ்வொரு பங்காளனும் வருடாந்தச் சம்பளமாக ரு. 800 000 ஐயும் மூலதனக் கணக்கின் ஆரம்ப மீதிக்கு 10% வருடாந்த வட்டியையும் பெறுவதற்கு உரித்துடையவர்கள். பங்குடமையானது 31.03.2023 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரைபு இலாபமாக ரு. 5 100 000 ஐ அறிக்கையிட்டிருந்தது. பிரியன் தனது சொந்தப் பணத்திலிருந்து பங்குடமையின் நடைமுறை வருடத்திற்கான செலவுகளுக்காக ரு. 300 000 செலுத்தியிருந்தார். எனினும், இது பங்குடமையின் புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை.

நிலான் 31.03.2023 இல் பங்குடமையிலிருந்து இளைப்பாறினார். இத்திகதியில் பங்குடமையின் நன்மதிப்பானது ரு. 1 200 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது பங்காளர்களின் மூலதனக் கணக்குகளினூடாகவே சீராக்கம் செய்யப்படல் வேண்டும். நிலானுக்குக் கொடுக்குமதியான தொகையானது அத்திகதியில் கடன் கணக்கொன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது. பிரியனும், லவனும் இலாப நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து பங்குடமையினைத் தொடர்ந்து நடத்துவதற்கு இணங்கியுள்ளனர்.

**14.** பிரியனின் 31.03.2023 இலுள்ளபடியான நடைமுறைக் கணக்கு மீதி:

(1) ரு. 2 200 000 (2) ரு. 2 300 000 (3) ரு. 2 600 000
(4) ரு. 2 900 000 (5) ரு. 3 000 000 (......)

**15.** நிலானின் இளைப்பாறலுக்கான சீராக்கத்தின் பின்னர் 31.03.2023 இலுள்ளபடியான பிரியனின் மூலதனக் கணக்கு மீதி மற்றும் நிலானின் கடன்கணக்கு மீதி

| | மூலதனக் கணக்கு - பிரியன் (ரு.'000) | கடன் கணக்கு - நிலான் (ரு.'000) |
|---|---|---|
| (1) | 5 800 | 2 400 |
| (2) | 5 800 | 4 200 |
| (3) | 6 400 | 2 600 |
| (4) | 6 400 | 4 200 |
| (5) | 6 600 | 2 600 |

(......)

- **16, 17 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

அம்மா PLC இன் கணக்குப் பதிவேடுகளிலிருந்து 31.03.2023 இல் முடிவடையும் வருடத்திற்கான பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | ரு.'000 |
|---|---|
| விற்பனைகள் | 4 500 |
| மொத்த இலாபம் | 2 100 |
| ஏனைய வருமானம் | 600 |
| வரிக்கு முன் இலாபம் | 1 200 |
| வருடத்துக்கான இலாபம் (வரிக்குப் பின்) | 800 |

31.03.2023 இல் கம்பனியின் இயந்திரத்தை இரண்டாவது தடவை மீள் மதிப்பீடு செய்தபோது ரு. 700 000 மிகையொன்று ஏற்பட்டிருந்தது. கம்பனியின் நடைமுறை வருடத்துக்கான இலாபமானது இம் மீள் மதிப்பீட்டைக் கருத்திற்கொள்ளாது கணிக்கப்பட்டிருந்தது.

31.03.2020 இல் முதலாவது தடவை மேற்கொள்ளப்பட்ட இவ்வியந்திரத்தின் மீள் மதிப்பீட்டில் இனங்காணப்பட்ட குறையானது ரு. 300 000 ஆக இருந்தது.

**16.** 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கு இனங்காணப்படவேண்டிய மொத்த வருமானம் மற்றும் மொத்தச் செலவுகள்:

| | மொத்த வருமானம் (ரு.' 000) | மொத்தச் செலவுகள் (ரு.' 000) |
|---|---|---|
| (1) | 5 100 | 3 700 |
| (2) | 5 100 | 3 900 |
| (3) | 5 400 | 4 300 |
| (4) | 5 800 | 3 900 |
| (5) | 5 800 | 4 300 |

(......)

**17.** 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான ஏனைய முற்றுமடங்கிய வருமானம் மற்றும் மொத்த முற்றுமடங்கிய வருமானம்:

| | ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ரு.' 000) | மொத்த முற்றுமடங்கிய வருமானம் (ரு.'000) |
|---|---|---|
| (1) | 400 | 800 |
| (2) | 400 | 1 500 |
| (3) | 400 | 1 800 |
| (4) | 700 | 800 |
| (5) | 700 | 1 200 |

(......)

[பக். 5 ஐப் பார்க்க

CamScanner

18. 'LKAS 2- இருப்புக்கள்' இன்படி பின்வரும் கூற்றுகளில் எது/எவை **சரியானது/சரியானவை?**

A - இருப்புக்களின் கிரயமானது எப்பொழுதும் கிரயச் சூத்திரமொன்றின் அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

B - இருப்புக்களை தேறிய தேறக்கூடிய பெறுமதிக்குக் குறைத்தெழுதும்போது ஏற்படும் நட்டமானது அது ஏற்பட்ட காலப் பகுதியில் செலவொன்றாக இனங்காணப்படுகின்றது.

C - வழமையான வியாபாரச் செயற்பாட்டின்போது மீள் விற்பனைக்காக வைத்திருக்கப்படும் சொத்துக்கள் இருப்புக்களாகக் கருதப்படுகின்றன.

(1) A மாத்திரம் (2) C மாத்திரம் (3) A, C மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (......)

19. ஜானகி PLC ஆனது 01.04.2022 இல் ஆரம்பிக்கப்பட்டது. இக்கம்பனியானது சாதாரண பங்கு மூலதனத்தினூடாக முழுமையாக நிதியிடப்பட்டுள்ளது. பின்வரும் தகவல்கள் 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான கம்பனியின் கணக்குப் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| | ரூ.'000 |
|---|---|
| காசு விற்பனைகள் | 1 500 |
| கடன் விற்பனைகள் | 3 600 |
| வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு | 1 600 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 1 100 |
| செலுத்திய வருமானவரி | 200 |

எல்லாக் கொள்வனவுகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வருடத்தின் செயற்பாட்டுச் செலவுகளானது ரூ. 500 000 பெறுமானத் தேய்வுச் செலவுகளை உள்ளடக்கியுள்ளது. 31.03.2023 இல் உள்ளவாறு வியாபாரக் கடன்பட்டோர் ரூ. 900 000 ஆக இருந்தது. முற்பணச் செலவுகள் அல்லது சென்மதி செலவுகள் எவையும் 31.03.2023 இல் இருந்திருக்கவில்லை.

'LKAS 7 - காசுப் பாய்ச்சல் கூற்று' இன்படி 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் தொகை யாது?

(1) ரூ. 1 800 000 (2) ரூ. 1 900 000 (3) ரூ. 2 300 000
(4) ரூ. 3 200 000 (5) ரூ. 3 900 000 (......)

20. அமலா PLC ஆனது 01.04.2020 இல் ரூ. 3 600 000 கிரயமான இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. இத்திகதியில், இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் அதன் எஞ்சிய பெறுமதி முறையே 8 வருடங்கள் மற்றும் ரூ. 400 000 ஆக இருந்தது. இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதி என்பன 01.04.2022 மீளாய்வு செய்யப்பட்டது. இதற்கமைய ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதியானது முறையே 6 வருடங்கள் மற்றும் ரூ. 600 000 ஆக திருத்தியமைக்கப்பட்டது.

'LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்' இன்படி, 31.03.2023 இல் முடிவடைந்த வருடத்திற்கு இனங்காணப்பட வேண்டிய இவ்வியந்திரத்தின் பெறுமானத் தேய்வுச் செலவு:

(1) ரூ. 333 333 (2) ரூ. 366 667 (3) ரூ. 500 000
(4) ரூ. 550 000 (5) ரூ. 700 000 (......)

21. சுமதி PLC இன் 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களானது 20.05.2023 இல் இயக்குநர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனிக்கெதிராக செய்யப்பட்ட வழக்கொன்று தொடர்பில் இழப்பீட்டுத் தொகையாக ரூ. 600 000 ஐச் செலுத்துவதற்கு 01.05.2023 இல் நீதிமன்றக் கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. 31.03.2023 இலுள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் இவ்வழக்கு தொடர்பில் ரூ. 800 000 ஆனது இழப்பீட்டுக்கான ஏற்பாடாக இனம் காணப்பட்டிருந்தது.
- கம்பனியின் கடன்பட்டோர் ஒருவர் முறிவடைந்துள்ளவராகப் 10.05.2023 இல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார். இக்கடன்பட்டவரிடமிருந்து 31.03.2023 இலுள்ளவாறு பெறவேண்டிய தொகை ரூ. 600 000 ஆக இருந்தது.

மேற்படி நிகழ்வுகளைக் கருத்திற் கொள்வதற்கு முன்னர் 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான இலாபம் ரூ. 3 500 000 ஆக இருந்தது.

'LKAS 10 - அறிக்கையிடும் காலத்துக்கு பின்னரான நிகழ்வுகள்' இன்படி இது தொடர்பான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான **சரியான** இலாபம் எது?

(1) ரூ. 2 700 000 (2) ரூ. 3 100 000 (3) ரூ. 3 300 000
(4) ரூ. 3 500 000 (5) ரூ. 3 700 000 (......)

22. 'LKAS 37- ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்' இன்படி பின்வரும் கூற்றுகளில் எது/எவை **சரியானது/சரியானவை?**

A - நிகழத்தக்க சொத்துக்கள் நிதிநிலைமைக்கூற்றில் இனங்காணப்படக்கூடாது.

B - எதிர்காலச் செயற்பாட்டு நட்டங்களுக்காக ஏற்பாடுகள் இனங்காணப்படக்கூடாது.

C - சாத்தியமான கடப்பாடுகள் காணப்படும்போது மட்டுமே நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிநிலைமைக்கூற்றில் இனங்காணப்படுகின்றன.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, B மாத்திரம் (5) A, C மாத்திரம் (......)

011757

**23.** மென்பானங்களை உற்பத்தி செய்யும் கம்பனி ஒன்றுடன் தொடர்புடைய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ.'000 |
|---|---|
| 01.01.2023 இல் உள்ளவாறு இருப்பு | 5 500 |
| **31.12.2023 இல் உள்ளவாறு:** | |
| – நடைமுறைச் சொத்துக்கள் | 15 000 |
| – நடைமுறைப் பொறுப்புக்கள் | 7 500 |

- நடைமுறைச் சொத்துக்கள் ரூ. 6 500 000 இருப்பையும், ரூ. 2 500 000 முற்பண செலவுகளையும் உள்ளடக்கியுள்ளது.
- 31.12.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான விற்பனைக் கிரயம் ரூ. 36 000 000 ஆகும்.

வருடமொன்றுக்கான வேலை நாட்கள் 360 எனக் கருதுக.

கம்பனியின் விரைவுச் சொத்துக்கள் விகிதம் மற்றும் இருப்பு வைத்திருத்தற் காலம்:

| | விரைவுச் சொத்துக்கள் விகிதம் | இருப்பு வைத்திருத்தற் காலம் (நாட்கள்) |
|---|---|---|
| (1) | 0.80 | 60 |
| (2) | 0.80 | 65 |
| (3) | 1.13 | 60 |
| (4) | 1.13 | 65 |
| (5) | 1.25 | 60 |

(……)

**24.** முகாமைக் கணக்கீட்டு அறிக்கைகள் தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எவை **சரியானவை?**

A - முகாமைக் கணக்கீட்டு அறிக்கைகள் நிறுவனமொன்றின் அக்கறையுடைய உள்ளகத் தரப்பினருக்காகத் தயாரிக்கப்படுகின்றன.

B - முகாமைக் கணக்கீட்டு அறிக்கைகளைத் தயாரிப்பதற்குக் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுவது கட்டாயமானதல்ல.

C - முகாமைக் கணக்கீட்டு அறிக்கைகளானவை முகாமையாளர்களுக்கு தேவை ஏற்படும்போது தயாரிக்கப்படுகின்றன.

D - முகாமைக் கணக்கீட்டு அறிக்கைகளானவை எதிர்வு கூறப்பட்ட தகவல்களை மாத்திரம் வழங்குகின்றன.

(1) B, C மாத்திரம் (2) A, B, C மாத்திரம் (3) A, C, D மாத்திரம்
(4) B, C, D மாத்திரம் (5) A, B, C, D ஆகியன எல்லாம் (……)

**25.** தனிப் பொருளொன்றை உற்பத்தி செய்யும் கம்பனியொன்று தனது செயற்பாடுகளை 01.04.2022 இல் தொடங்கியது. 31.03.2023 இல் முடிவடையும் வருடத்தில் ஏற்பட்ட கிரயங்கள் பின்வருமாறு இருந்தன.

| **அலகொன்றுக்கான மாறும் கிரயம்:** | ரூ. |
|---|---|
| நேர் மூலப்பொருள் | 90 |
| நேர்க் கூலி | 50 |
| உற்பத்தி மேந்தலைகள் | 60 |

மொத்த நிலையான உற்பத்தி மேந்தலைகள் ரூ. 1 750 000
வருடாந்த உற்பத்தி 25 000 அலகுகளாகும்.

31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான அலகொன்றின் மொத்த உற்பத்திக் கிரயம்:

(1) ரூ. 200 (2) ரூ. 240 (3) ரூ. 270 (4) ரூ. 298 (5) ரூ. 338 (……)

**26.** உற்பத்திக் கம்பனியொன்றின் மேந்தலைகள் தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது/எவை **சரியானது/சரியானவை?**

A - பொதுவாக ஏற்பட்ட உற்பத்தி மேந்தலைகளானவை கிரய நிலையங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

B - மொத்த மேந்தலைகளானது மொத்தக் கிரயத்துக்கும் மொத்த உற்பத்திக் கிரயத்துக்குமிடையிலான வேறுபாடாகும்.

C - மேந்தலை உறிஞ்சல் வீதமானது இயந்திர மணித்தியாலங்கள் அல்லது ஊழிய மணித்தியாலங்களின் அடிப்படையில் மாத்திரமே கணிக்கப்படும்.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) A, B மாத்திரம்
(4) A, C மாத்திரம் (5) A, B, C ஆகியன எல்லாம் (……)

**27.** உற்பத்திப் பொருளொன்றின் 'கிரயம்-தொகை-இலாபம்' பகுப்பாய்வு தொடர்பில் பின்வரும் கூற்று/ கூற்றுகளில் **சரியானது/ சரியானவை** எவை?

A - சமப்பாட்டுப் புள்ளியில் மொத்த விற்பனைப் பெறுமதியானது மொத்த நிலையான கிரயத்துக்குச் சமமானது.

B - சமப்பாட்டுப் புள்ளியில் மொத்த மாறும் கிரயமும் மொத்த நிலையான கிரயமும் முழுமையாக ஈடுசெய்யப்படுகின்றது.

C - சமப்பாட்டுப் புள்ளிக்கு அப்பால் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு அலகிலிருந்தான பங்களிப்பும் இலாபமும் ஒன்றுக்கொன்று சமனாகும்.

(1) B மாத்திரம் (2) A, B மாத்திரம் (3) A, C மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகியன எல்லாம் (……)

0002401

[பக். 7 ஐப் பார்க்க

CamScanner

- **28, 29 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

கம்பனியொன்று 'A', 'B' ஆகிய இரு வகையான பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடுகின்றது. முதலாம் வருடச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

| | 'A' | 'B' |
|---|---|---|
| உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை | 8 000 | 2 000 |
| மூலக்கிரயம் (ரூ.) | 280 000 | 120 000 |
| அலகொன்றை உற்பத்தி செய்யத் தேவைப்படும் ஊழிய மணித்தியாலங்கள் | 5 | 6 |

**ஏனைய தகவல்கள்:**

| | |
|---|---|
| மொத்த உற்பத்தி மேந்தலைகள் | ரூ. 416 000 |
| மொத்த உற்பத்தியல்லா மேந்தலைகள் | ரூ. 208 000 |
| மொத்த ஊழிய மணித்தியாலங்கள் | 52 000 |

உற்பத்தி மேந்தலைகள் மற்றும் உற்பத்தியல்லா மேந்தலைகள் ஆனவை ஊழிய மணித்தியாலங்களின் அடிப்படையில் உறிஞ்சப்படுகின்றன. உற்பத்திப் பொருட்களின் விற்பனை விலையானது மொத்தக் கிரயத்தில் 25% இலாபத்தைச் சேர்த்து நிர்ணயிக்கப்படுகின்றது.

**28.** உற்பத்திப் பொருள் 'A' இன் அலகொன்றுக்கான மதிப்பிடப்பட்ட மொத்த உற்பத்திக் கிரயம் மற்றும் அலகொன்றுக்கான மொத்தக்கிரயம்:

| | அலகொன்றுக்கான மொத்த உற்பத்திக் கிரயம் (ரூ.) | அலகொன்றுக்கான மொத்தக்கிரயம் (ரூ.) |
|---|---|---|
| (1) | 60 | 76 |
| (2) | 75 | 95 |
| (3) | 75 | 100 |
| (4) | 80 | 95 |
| (5) | 80 | 100 |

(......)

**29.** உற்பத்திப் பொருள் 'B' இன் அலகொன்றிற்கான மதிப்பிடப்பட்ட விற்பனை விலை:

(1) ரூ. 75 (2) ரூ. 135 (3) ரூ. 144 (4) ரூ. 165 (5) ரூ. 176 (......)

**30.** கம்பனியொன்று 'X' மற்றும் 'Y' என்னும் இரண்டு செயற்றிட்டங்களை கருத்திற் கொள்கிறது. ஒவ்வொரு செயற்றிட்டமும் ஐந்து வருட காலப் பகுதிகளைக் கொண்டதாகும். பின்வரும் தகவல்களானது இவ்விரண்டு செயற்றிட்டங்கள் தொடர்பானவை:

| | செயற்றிட்டம் 'X' (ரூ.'000) | செயற்றிட்டம் 'Y' (ரூ.'000) |
|---|---|---|
| இயந்திரங்களின் கொள்வனவு விலை | 8 250 | 7 525 |
| இயந்திரங்களைக் கொண்டு வருவதற்கும் பொருத்துவதற்குமான கிரயம் | 150 | 125 |
| ஆரம்பத் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடு | 250 | 325 |
| வருடம் 1 தொடக்கம் 5 வரைக்கான தேறிய காசு பாய்ச்சலின் நிகழ்காலப் பெறுமதி | 9 566 | ? |
| தேறிய நிகழ்காலப் பெறுமதி | ? | 948 |

முகாமையாளர் ஒருவர் இச் செயற்றிட்டங்களை மதிப்பிடும்போது பின்வரும் கூற்றுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

A- செயற்றிட்டம் 'X' இன் தேறிய நிகழ்காலப் பெறுமதி ரூ. 916 000 ஆகும்.
B- செயற்றிட்டம் 'Y' இன் ஆரம்பக் காசு வெளிப்பாய்ச்சல் ரூ. 7 650 000 ஆகும்.
C- செயற்றிட்டம் 'Y' இன் வருடம் 1 தொடக்கம் 5 வரையான தேறிய காசு பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதி ரூ. 8 923 000 ஆகும்.

இவ்விரண்டு செயற்றிட்டங்கள் தொடர்பில் மேற்படி கூற்று/ கூற்றுகளில் எது/எவை **சரியானது/சரியானவை?**

(1) A மாத்திரம் (2) C மாத்திரம் (3) A, C மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகியன எல்லாம் (......)

- **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**31.** 'LKAS 1- நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்' இன்படி பொது நோக்கத்துக்கான நிதிக்கூற்றுகள் தொடர்பில் பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **உண்மை (T)** அல்லது **பொய் (F)** எனக் குறிப்பிடுக.

| **கூற்று** | **உண்மை/பொய்** |
|---|---|
| A - பொருத்தமான கணக்கீட்டு நியமங்களுக்கமையத் தயாரித்தல். | ................. |
| B - நிறுவனத்திடமிருந்து குறித்த தகவல்களை வழங்கும்படி கேட்கக்கூடிய நிலையில் இல்லாத பாவனையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தயாரித்தல். | ................. |
| C - நிறுவனமொன்றின் தொடர்ந்தியங்குதல் பற்றிய முகாமையின் மதிப்பீட்டின் அடிப்படையில் தயாரித்தல். | ................. |
| D - நிறுவனமொன்றின் செயற்பாட்டுப் பெறுபேறுகள் பற்றிய தகவல்களை அட்டுறு அடிப்படை மற்றும் காசு அடிப்படை ஆகிய இரண்டு அடிப்படைகளிலும் வழங்குதல். | ................. |

[பக். 8 ஐப் பார்க்க

CamScanner

**32.** வணிகமொன்றின் கணக்கீட்டுச் சமன்பாட்டில் காணப்படும் **உரிமையாண்மைத்** தொகையில் பின்வரும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் கொண்டுள்ள **தேறிய தாக்கத்தைக்** (பெறுமதியுடன்) குறிப்பிடுக.

| **கொடுக்கல் வாங்கல்** | **தேறிய தாக்கம் அதிகரிப்பு (I) / குறைவு (D) / மாற்றமில்லை (NC)** | **பெறுமதி (ரூ.'000) (பொருத்தமானதாயின்)** |
|---|---|---|
| A - வருடத்துக்கான வட்டி ரூ. 600 000 உட்பட கடன் தவணைக்கட்டணக் கொடுப்பனவு ரூ. 1 250 000 | ………………… | ……………… |
| B - 10% வியாபாரக் கழிவிற்கு உரித்துடைய ரூ. 2 500 000 பட்டியல் விலையிலான பொருட்கள் கடனடிப்படையில் கொள்வனவு | ………………… | ……………… |

- **33, 34 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

வணிகமொன்றின் எல்லாக் காசுக் கொடுக்கல் வாங்கல்களும் வங்கி நடைமுறைக் கணக்கொன்றினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. பின்வரும் தகவல்கள் 2023 டிசெம்பர் மாதத்துக்கான இவ்வணிகத்தின் காசுக் கணக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| | ரூ.'000 |
|---|---|
| 01.12.2023 இல் உள்ளவாறான காசுக்கணக்கு மீதி (வரவு)……………… | 200 |
| 31.12.2023 இல் உள்ளவாறான காசுக்கணக்கு மீதி (வரவு)……………… | 800 |

04.01.2024 இல் பெறப்பட்ட 2023 டிசெம்பர் மாதத்துக்கான வங்கிக்கூற்றின் சுருக்கம்:

| | ரூ.'000 |
|---|---|
| 01.12.2023 இல் உள்ளவாறான செலவு மீதி……………… | 200 |
| வசூலிக்கப்பட்ட மொத்தக் காசோலைகள் ……………… | 2 200 |
| கொடுப்பனவுகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மொத்தக் காசோலைகள் ……………… | 1 500 |
| நேரடியாகப் பெறப்பட்டவை (முதலீட்டு வருமானம்)……………… | 300 |
| நிலையான கட்டளைக் கொடுப்பனவு - கடன் தவணைக் கட்டணம் (ரூ. 30 000 வட்டி உள்ளடங்கலாக) | 50 |
| 31.12.2023 இல் உள்ளவாறான மீதி……………… | ? |

நேரடியாகப் பெறப்பட்டவைகளும், நிலையான கட்டளைக் கொடுப்பனவுகளும் வங்கிக் கூற்றினைப் பெற்ற பின்னரே காசுக் கணக்கில் பதிவு செய்யப்படுகின்றன. மேலும், வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து பெறப்பட்டு, வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ. 200 000 காசோலையொன்று மதிப்பிழந்துள்ளது. இம்மதிப்பிழந்த காசோலைக்குக் கணக்குப் புத்தககங்களில் எந்தச் சீராக்கமும் செய்யப்படவில்லை.

**33.** பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

| **31.12.2023 இலுள்ளவாறு** | **தொகை (ரூ.'000)** | **மீதி (வரவு/செலவு)** |
|---|---|---|
| (அ) வங்கிக்கூற்று மீதி | ……………………… | ……………………… |
| (ஆ) காசுக்கணக்கின் சீராக்கிய மீதி | ……………………… | ……………………… |

**34.** பின்வருவனவற்றைப் பதிவதற்கான இரட்டைப் பதிவுகளை எழுதுக. (விளம்பல் தேவையில்லை):

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| (அ) மதிப்பிழந்த காசோலை ரூ. 200 000: | | |
| (ஆ) நிலையான கட்டளைக் கொடுப்பனவு - கடன் தவணைக் கட்டணம் ரூ. 50 000 (ரூ. 30 000 வட்டி உட்பட): | | |

[பக். 9 ஐப் பார்க்க

**35.** பின்வரும் கூற்றுகளை **மிகவும் பொருத்தமான** கணக்கீட்டு எண்ணக்கருக்களைப் பயன்படுத்திப் பூர்த்திசெய்க.

A - நிறுவனமொன்றின் நிதிக்கூற்றுகளில் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் என இனங்காண்பதற்கான அடிப்படையினை ……………………… எண்ணக்கரு வழங்குகிறது.

B - பங்குதாரர்களுக்குச் செலுத்தப்படும் பங்கிலாபங்களானது ……………………… எண்ணக்கரு அடிப்படையில் உரிமையாண்மை மாற்றங்கள் கூற்றில் இலாபங்களிலிருந்தான பகிர்வாகச் சமர்பிக்கப்படுகின்றது.

C - ……………………… எண்ணக்கருவானது நிச்சயமற்ற காலம் அல்லது தொகையுடன் பொறுப்புக்களுக்கான ஏற்பாடுகளை இனங்காண்பதற்கான அடிப்படையினை வழங்குகிறது.

D - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை நியாயப் பெறுமதியில் மீள் மதிப்பீடு செய்வதானது ……………………… எண்ணக்கருவிலிருந்து விலகி இருப்பதற்கான உதாரணமொன்றாகும்.

**36.** உற்பத்தி வணிகமொன்றின் நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பது தொடர்பாகப் பின்வரும் வசனங்களை / சமன்பாடுகளைப் பூர்த்தி செய்க.

A தீ காரணமாக ஏற்பட்ட மூலப்பொருட்கிரய நட்டமானது ……………… கூற்றில் இனங்காணப்படும்.

B நடைமுறை வேலை இருப்பானது ……………………… கிரயத்தில் அல்லது மொத்த உற்பத்திக் கிரயத்தில் மதிப்பிடப்படுகிறது.

C (ஆரம்ப மூலப்பொருள் இருப்பு + கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் - இறுதி மூலப்பொருள் இருப்பு) = ………………………

D (ஆரம்ப முடிவுப்பொருள் இருப்பு + மொத்த உற்பத்திக் கிரயம் - இறுதி முடிவுப்பொருள் இருப்பு) = ………………………

**37.** "அமைதி விளையாட்டுக்கழகம்" ஆனது 01.01.2023 இல் 300 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. அங்கத்தவர் ஒருவருக்கான மாதாந்தச் சந்தா ரூ. 1 000 ஆகும். சந்தாவுடன் தொடர்புடைய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 01.01.2023 இல் முற்பணமாகப் பெறப்பட்ட சந்தா | - | ரூ. 30, 000 |
| 01.01.2023 இல் நிலுவையாகவுள்ள சந்தா | - | ரூ. 40, 000 |

01.01.2023 இல் 30 அங்கத்தவர்கள் சந்தாப் பணத்தைச் செலுத்தாது இருந்தனர். அவர்களுள் 20 பேர் 2022 டிசெம்பர் மாத நிலுவைகளையும், நடைமுறை வருடத்திற்கான முழுச்சந்தாவையும் 2023 ஆம் வருடத்தில் செலுத்தினர். நிலுவையாக இருந்த மீதி 10 அங்கத்தவர்களும் 2022 ஆம் வருடத்தின் கடைசி இரு மாதங்களுக்கான நிலுவைகளையும் 2023 ஆம் வருடத்துக்கான முழுச் சந்தாவையும் 31.12.2023 வரை செலுத்தத் தவறியிருந்தனர்.

01.01.2023 இல் முற்பணமாகப் பெறப்பட்ட எல்லாச் சந்தாப் பணமும் 2023 ஆம் வருடத்துடன் தொடர்புடையனவாகும்.

ஏனைய எல்லா அங்கத்தவர்களும் தமது சந்தாவை முழுமையாகச் செலுத்தியிருந்தனர்.

பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

(அ) 31.12.2023 இல் உள்ளவாறு பெறவேண்டிய சந்தா (ரூ.'000) :…………………

(ஆ) 31.12.2023 இல் முடிவடையும் வருடத்துக்குப் பெறப்பட்ட மொத்தச் சந்தா (ரூ. '000):…………………

**38.** பங்குடமையொன்று தொடர்பில் பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **உண்மை (T)** அல்லது **பொய் (F)** எனக் குறிப்பிடுக.

| கூற்று | உண்மை/பொய் |
|---|---|
| A - பங்குடமையொன்றை எழுத்து மூலமான உடன்பாடின்றி நடத்த முடியாது. | ……………… |
| B - 1890 பங்குடமைச் சட்டத்தின்படி பங்காளர்களின் ஆகக்கூடிய எண்ணிக்கை 20 அங்கத்தவர்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. | ……………… |
| C - பங்குடமையொன்றின் நன்மதிப்பானது புதிய பங்காளர் ஒருவரை அனுமதிக்கும்பொழுது மட்டுமே சீராக்கப்படுகின்றது. | ……………… |
| D - 1890 பங்குடமைச் சட்டத்தின் பிரிவு 24 இன் படி பங்காளர்களால் அவர்களது மூலதனத்திற்கு மேலதிகமாகக் கடனாக வழங்கிய தொகைக்கு 5% வருடாந்த வட்டியைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள். | ……………… |

[பக். 10 ஐப் பார்க்க

CamScanner

**39.** ரவியும், சசியும் இலாப நட்டங்களைச் சமனாகப் பகிர்ந்து கொண்டு பங்குடமையொன்றை நடாத்தி வருகின்றனர். பின்வரும் தகவல்கள் பங்குடமையின் நடைமுறைக் கணக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| | ரவி (ரூ.'000) | சசி (ரூ.'000) |
|---|---|---|
| 01.04.2022 இல் உள்ளவாறான மீதி (செலவு) | 3 000 | 2 000 |
| பங்காளர் சம்பளங்கள் | 1 400 | 1 200 |
| பங்காளர்களுக்குச் செலுத்திய சம்பளங்கள் | (1 000) | (1 000) |
| மூலதன வட்டி | 800 | 400 |
| இலாபப் பங்கு | ? | ? |
| 31.03.2023 இல் உள்ளவாறான மீதி (செலவு) | 5 100 | 3 500 |

31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) ரவியின் இலாபப்பங்கு (ரூ.'000) : ..............................

(ஆ) சசிக்குப் பகிரப்பட்ட மொத்த இலாபம் (ரூ.'000) : ..............................

(இ) பங்குடமையின் இலாபம் (ரூ.'000) : ..............................

**40.** நிதியறிக்கையிடலுக்கான எண்ணக்கருச் சட்டகம் (2018) இற்கமையப் பின்வரும் வசனங்களைப் பூர்த்தி செய்க:

A - நிதிக் கூற்றுக்களானது வழமையாக .............................. எடுகோளின்படி தயாரிக்கப்படுகிறது.

B - பொருளாதார நன்மைகளை உருவாக்குவதற்கான ஆற்றலைக் கொண்டுள்ள உரிமை .............................. எனப்படும்.

C - அளவீட்டு அடிப்படையினைத் தேர்ந்தெடுக்கும்போது கருத்திற் கொள்ள வேண்டிய இரு காரணிகள் .............................. மற்றும் .............................. ஆகும்.

**41.** வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியின் சாதாரண பங்கு தொடர்பில் பின்வரும் ஒவ்வொரு கூற்றும் உண்மையா **(T)** அல்லது **பொய்யா (F)** எனக் குறிப்பிடுக.

| | கூற்று | உண்மை/பொய் |
|---|---|---|
| A - | பங்குகளின் உரிமை வழங்கலானது கம்பனியின் உரிமையாண்மை மற்றும் சொத்துக்கள் இரண்டினதும் அதிகரிப்பிற்கு வழிவகுக்கும். | ............... |
| B - | பங்கு வழங்கலில், விண்ணப்பங்களிலிருந்து பெறப்படும் காசானது நேரடியாகப் பங்கு மூலதனக்கணக்கில் செலவு வைக்கப்படுகின்றது. | ............... |
| C - | பங்குகளின் ஒதுக்கலானது எப்போதும் விகிதாசார ஒதுக்குதல் அடிப்படையில் செய்யப்படல் வேண்டும். | ............... |
| D - | ஒதுக்கங்களை மூலதனமாக்கலானது கம்பனியின் பங்குதாரர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்புக்கு வழிவகுக்கும். | ............... |

**42.** பின்வரும் தகவல்கள் 2023 மார்ச் மாதத்துக்கான துணி உற்பத்திக் கம்பனியொன்றில் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் (பருத்தித் துணி) ஒன்றுடன் தொடர்புடையனவாகும்.

| திகதி | விபரம் |
|---|---|
| 01 | ஆரம்ப இருப்பு - 500 மீற்றர் (கொள்வனவு விலை - மீற்றருக்கு ரூ. 2 000) |
| 10 | தொழிற்சாலைக்கு வழங்கியது - 300 மீற்றர் |
| 20 | கொள்வனவு செய்யப்பட்டது - 400 மீற்றர், மீற்றருக்கு ரூ. 2 500 படி |
| 31 | தொழிற்சாலைக்கு வழங்கியது - 360 மீற்றர் |

'LKAS 2 - இருப்புக்கள்' இன்படி பின்வரும் ஒவ்வொரு கிரயச் சூத்திரத்தின்படி 31.03.2023 இல் உள்ளவாறான இம் மூலப்பொருள் இருப்பின் கிரயம் யாது?

(அ) முதல் உள் முதல் வெளி (FIFO) முறையின்படி கிரயம் (ரூ.' 000) : ..............................

(ஆ) நிறையளிக்கப்பட்ட சராசரி கிரய (WAC) முறையின் படி கிரயம் (ரூ.' 000) : ..............................

**43.** 'LKAS 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்' இன்படி பின்வரும் நிலைமைகள் ஒவ்வொன்றும் **கணக்கீட்டுக் கொள்கை மாற்றமா?** அல்லது **கணக்கீட்டு மதிப்பீடு மாற்றமா?** எனக் குறிப்பிடுக.

| | நிலைமை | கொள்கை மாற்றம் / மதிப்பீட்டு மாற்றம் |
|---|---|---|
| A - | பெறுமானத்தேய்வு முறையினை நேர்கோட்டு முறையிலிருந்து குறைந்து செல்லும் மீதி முறைக்கு மாற்றுதல் | .............................. |
| B - | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் அளவீட்டு அடிப்படையினைக் கிரய மாதிரியிலிருந்து மீள்மதிப்பீட்டு மாதிரிக்கு மாற்றுதல் | .............................. |
| C - | பெறுமானத் தேய்விடக்கூடிய சொத்தொன்றின் பயன்தரு ஆயுட்காலத்தை மாற்றுதல் | .............................. |
| D - | இருப்பின் கிரயத்தை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கிரயச் சூத்திரத்தை நிறையளிக்கப்பட்ட சராசரிக் கிரய முறையிலிருந்து (WAC) முதல் உள் முதல் வெளி (FIFO) முறைக்கு மாற்றல் | .............................. |

பக். 11 ஐப் பார்க்க

CamScanner

**44.** உற்பத்திக் கம்பனியொன்றின் 31.03.2023 இல் முடிவடைந்த வருடத்துக்கான புத்தகங்களிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | ரூ.'000 |
|---|---|
| நீண்டகாலக் கடன் | 12 000 |
| வருடத்திற்கான வட்டிச் செலவு | 1 200 |
| வருடத்திற்கான வருமானவரிச் செலவு | 800 |

நடைமுறை வருடத்திற்கான உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம் மற்றும் கடனிற்கு உரிமையாண்மை விகிதமானது முறையே 20% மற்றும் 60% ஆக கணிக்கப்பட்டுள்ளது.
பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

(அ) 31.03.2023 இலுள்ளவாறான உரிமையாண்மை (ரூ.'000) : ......................................

(ஆ) 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான இலாபம் (ரூ.'000) : ......................................

(இ) 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான வட்டிக்காப்பு விகிதம் (தடவைகள்) : ......................................

**45.** பின்வரும் தகவல்களானவை கம்பனியொன்றின் உற்பத்தி செயன்முறையில் பயன்படுத்தப்படும் மூலப்பொருள் தொடர்பானவை.

| | |
|---|---|
| வருடாந்தக் கேள்வி | - 120 000 அலகுகள் |
| கட்டளைத்தொகை 3 000 அலகுகளாக இருக்குமாயின் வருடாந்தக் கட்டளைக்கிரயம் | - ரூ. 60 000 |
| அலகொன்றிற்கான வருடாந்த இருப்பு வைத்தற் கிரயம் | - ரூ. 10 |

பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

(அ) சிக்கனக் கட்டளைத் தொகை (EOQ) (அலகுகள்) :..................................

(ஆ) கட்டளையொன்றிற்காக சிக்கனக் கட்டளைத் தொகை கட்டளையிடப்படுமாயின் மொத்த வருடாந்த இருப்பு வைத்தற் கிரயம் (ரூ.) :..................................

**46.** ஆதனா PLC ஆனது உற்பத்திக் கம்பனியாகும். 25 000 அலகுகள் இயலளவு மட்டத்தில் அதன் கிரய விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

- மொத்தக்கிரயம் ரூ. 7 500 000
- மொத்த உற்பத்தி மேந்தலைகள் ரூ. 2 500 000
- மொத்த மாறும் கிரயமானது மொத்தக் கிரயத்தில் 60% க்குச் சமனாகும்.
- மூலக் கிரயமானது மாறுங்கிரயத்தை மாத்திரமே உள்ளடக்கியுள்ளது.
- அலகொன்றிற்கான மாறும் மேந்தலைகள் ரூ. 70 ஆகும்.
- அலகொன்றிற்கான மாறும் உற்பத்தி மேந்தலைகள் ரூ. 40 ஆகும்.

பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

(அ) அலகொன்றுக்கான மூலக் கிரயம் (ரூ.) : ......................................

(ஆ) மொத்த உற்பத்திக் கிரயம் (ரூ.'000) : ......................................

(இ) மொத்த உற்பத்தியல்லா மேந்தலைகள் (ரூ.'000) : ......................................

**47.** பின்வரும் தகவல்கள் நிறுவனமொன்றினால் தனிப்பொருள் ஒன்றை உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்பட்ட 'A', 'B' மற்றும் 'C' ஆகிய மூன்று மூலப் பொருட்களுடன் தொடர்புடையவையாகும்.

| | A | B | C |
|---|---|---|---|
| அலகொன்றுக்குத் தேவைப்படும் மூலப்பொருள் (கிலோ கிராம்) | 10 | 8 | 6 |
| மறுகட்டளைத் தொகை (கிலோ கிராம்) | 20 000 | 15 000 | 20 000 |
| மறுகட்டளை மட்டம் (கிலோ கிராம்) | ? | 24 000 | 15 000 |
| விநியோகக் காலம் (கிழமைகள்): | | | |
| ஆகக்குறைந்தது | 2 | 4 | 3 |
| ஆகக்கூடியது | 4 | 6 | 5 |

இவ்வுற்பத்திப் பொருளின் வாராந்த உற்பத்தியானது 300 தொடக்கம் 500 அலகுகள் வீச்சில் வேறுபடுகின்றது.

பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

(அ) மூலப்பொருள் 'A' இன் மறுகட்டளை மட்டம் (கிலோ கிராம்) :......................................

(ஆ) மூலப்பொருள் 'B' இன் ஆகக்கூடிய இருப்பு மட்டம் (கிலோ கிராம்) :......................................

(இ) மூலப்பொருள் 'C' இன் ஆகக்குறைந்த இருப்பு மட்டம் (கிலோ கிராம்) :......................................

CS CamScanner

**48.** பின்வரும் தகவல்களானவை உற்பத்தி நிறுவனமொன்றின் கூலிகள் தொடர்பானவை.

- ஊழியர் ஒருவருக்கான நியம உற்பத்தியானது மாதமொன்றிற்கு 800 அலகுகளாகும்.
- ஊழியர் ஒருவருக்கு நியம உற்பத்தி மட்டம் வரை அலகொன்றிற்கு ரூ. 100 செலுத்தப்படுகிறது.
- நியம உற்பத்தி மட்டத்திற்கு மேலான ஒவ்வொரு அலகிற்கும் அலகொன்றிற்கு ரூ. 120 செலுத்தப்படுகிறது.
- இரண்டு ஊழியர்களின் 2023 ஜனவரி மாதத்திற்கான உண்மையான உற்பத்தி:

| ஊழியர் இல. | உண்மையான உற்பத்தி (அலகுகள்) |
|---|---|
| 001 | 950 |
| 002 | 800 |

- இந்நிறுவனத்தின் களஞ்சிய காப்பாளருக்கு (ஊழியர் இல 003) நாளொன்றிற்கு ரூ. 1 000 செலுத்தப்படுகிறது. இவர் நாளாந்த அடிப்படையில் 2023 ஜனவரி மாதத்தில் 25 நாட்கள் வேலை செய்துள்ளார்.
- ஒவ்வொரு ஊழியருக்கும் மாதாந்த பிரயாணப் படியாக ரூ. 5 000 செலுத்தப்படுகிறது.

நிறுவனத்தின் 2023 ஜனவரி மாதத்திற்கான பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) மொத்த ஊழியக் கிரயம் (ரூ.) : ......................................

(ஆ) மொத்த நேர் ஊழியக் கிரயம் (ரூ.) : ......................................

(இ) மொத்த நேரில் ஊழியக் கிரயம் (ரூ.) : ......................................

**49.** கம்பனியொன்று தனிப்பொருள் ஒன்றை உற்பத்தி செய்யத் திட்டமிடுகிறது. பின்வரும் மதிப்பீடுகளானது 2024 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

| | ஜனவரி | பெப்ரவரி |
|---|---|---|
| மூலக்கிரயம் (ரூ.) | 480 000 | 600 000 |
| மொத்த மேந்தலைகள் (ரூ.) | 520 000 | 600 000 |
| உற்பத்தி (அலகுகள்) | 8 000 | 10 000 |

மேலதிக தகவல்கள்:

- இவ்வுற்பத்திப் பொருளின் அனைத்து மூலக்கிரயங்களும் மாறும் கிரயங்களாகும்.
- மொத்த மேந்தலைகளானது மாறும் மற்றும் நிலையான மேந்தலைகள் இரண்டையும் உள்ளடக்குகிறது.
- இக்காலப்பகுதியில் நிலையான மேந்தலையானது மாற்றமடையாது காணப்படுகிறது.
- அலகொன்றிற்கான மதிப்பிடப்பட்ட விற்பனை விலை ரூ. 125 ஆகும்.

பின்வருவனவைகளைக் குறிப்பிடுக:

(அ) அலகொன்றிற்கான மாறும் கிரயம் (ரூ.) : ......................................

(ஆ) பங்களிப்பு - விற்பனை விகிதம் : ......................................

(இ) சமப்பாட்டுப் புள்ளி (அலகுகள்) : ......................................

**50.** கம்பனியொன்று இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்ய விரும்புகிறது. இவ்வியந்திரத்தின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்கள் ஆகும். இவ்வியந்திரத்தின் மதிப்பிடப்பட்ட காசுப்பாய்ச்சல்கள் கீழே தரப்படுகின்றன.

| | ரூ.'000 |
|---|---|
| இயந்திரத்தின் கொள்வனவுக் கிரயம் | 8 250 |
| ஆரம்பத்தில் இயந்திரத்திற்குத் தேவைப்படும் தொழிற்படு மூலதனம் | 1 000 |
| வருடத்திற்கான தேறிய காசு உட்பாய்ச்சல் | 3 300 |
| பயன்தரு ஆயுட்காலத்தின் இறுதியில் இயந்திரத்தின் எஞ்சிய பெறுமதி | 1 250 |

தொழிற்படு மூலதனமானது இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலத்தின் இறுதியில் மீளப்பெறப்பட முடியும். இயந்திரமானது நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடப்படுகின்றது.

இயந்திரத்துக்கான பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

(அ) திரும்பப் பெறும் காலம் (வருடங்கள்) : ......................................

(ஆ) 5 வது வருடத்தில் மொத்தத் தேறிய காசு உட்பாய்ச்சல்கள் (ரூ.'000) : ......................................

(இ) கணக்கீட்டு வருவாய் விகிதம் (சராசரி முதலீட்டு அடிப்படையில்) : ......................................

* * *

CamScanner

 001962

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

| | | |
|---|---|---|
| ගිණුම්කරණය II<br>கணக்கீடு II<br>Accounting II | 33 T II | |

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

செய்நிரலாக்கத்தகா (Non - Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.

**அறிவுறுத்தல்கள் :**

- ❊ **முதலாம், இரண்டாம்** வினாக்கள் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ❊ ஒவ்வொரு வினாவுக்கும் **புதிய தாளில்** விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.
- ❊ உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.
- ❊ இவ்வினாத்தாளுக்கு **200** புள்ளிகள் உரித்தாகும்.

**1.** வரையறுத்த பவானி பொதுக்கம்பனியானது தனிப்பொருளொன்றை உற்பத்தி செய்யும் உற்பத்திக் கம்பனியொன்றாகும். 31.03.2023 இல் உள்ளவாறான இக்கம்பனியின் சுருக்கிய பரீட்சை மீதியானது கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கிரயம் | 85 000 | |
| 01.04.2022 இல் திரண்ட பெறுமானத் தேய்வு | | 12 500 |
| சொத்துப்பாவனை உரிமை - அலுவலகக் கட்டடம் | 21 000 | |
| குத்தகைப் பொறுப்பு - அலுவலகக் கட்டடம் | | 21 000 |
| மோட்டார் வாகன அகற்றல் மீதான ஆதாயம் | | 600 |
| விற்பனைகள் | | 75 900 |
| விற்பனைக் கிரயம் | 45 200 | |
| இருப்புக்கள் - மூலப் பொருட்கள் | 600 | |
| - முடிவுப் பொருட்கள் | 3 600 | |
| ஏனைய வருமானங்கள் | | 2200 |
| வியாபார வருமதிகள் | 9 150 | |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | | 6 500 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 300 | |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | | 40 000 |
| 01.04.2022 இல் நிறுத்தி வைத்த வருவாய்கள் | | 24 000 |
| விநியோகக்கிரயம் | 8 900 | |
| நிர்வாகச் செலவுகள் | 7 500 | |
| ஏனைய செலவுகள் | 1 000 | |
| நிதிக் கிரயம் | 500 | |
| செலுத்திய வருமானவரி | 1 100 | |
| 01.04.2022 இல் வருமான வரிக்கான ஏற்பாடு | | 350 |
| 01.04.2022 இல் உத்தரவாதத்துக்கான ஏற்பாடு | | 800 |
| | **183 850** | **183 850** |

[பக். 2 ஐப் பார்க்க

Scanned with CamScanner

**மேலதிக தகவல்கள்:**

31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வரும் தகவல்கள் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

(i) நடைமுறை வருடத்தில் 10 000 பொருள் அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டன. இவற்றுள் 10% மான அலகுகள் 31.03.2023 இல் விற்பனை செய்யப்படாமல் இறுதி முடிவுப் பொருள் இருப்பாக மீதியாக இருந்தன. பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள விற்பனைக்கிரயம் மற்றும் இறுதி முடிவுப் பொருட்களின் இருப்புக் கிரய கணிப்பீடுகளில் பொருள் உற்பத்தியுடன் தொடர்புடைய பெறுமானத் தேய்வானது கவனத்திற் கொள்ளப்படவில்லை. இவ்வணிகத்தில் நடைமுறை வேலை இருப்புக்கள் எவையும் இருக்கவில்லை எனக் கருதுக.

(ii) கம்பனிக்குச் சொந்தமான மோட்டார் வாகனமானது 01.04.2022 இல் ரூ. 4 000 000 க்கு விற்பனை செய்யப்பட்டது. இதனால் ரூ. 600 000 ஆதாயமொன்று ஏற்பட்டது. இத்திகதியில் இம் மோட்டார் வாகனத்தின் திரண்ட பெறுமானத் தேய்வானது ரூ. 2 100 000 ஆக இருந்தது. இவ்வகற்றலானது சரியாகப் பதியப்பட்டுள்ளது.

(iii) பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உள்ளடக்கம் மற்றும் அவற்றின் திரண்ட பெறுமானத் தேய்வு, அச்சொத்துகளின் பயன்தரு ஆயுட்காலங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன. (இத்தகவல்களானது மேலே (ii) இல் குறிப்பிடப்பட்ட மோட்டார் வாகன அகற்றலுக்கான கணக்கீட்டுப் பதிவுகளின் பின்னர் வழங்கப்பட்டுள்ளது.)

| விபரம் | கிரயம் 31.03.2023 இல் உள்ளவாறு (ரூ.'000) | திரண்ட பெறுமானத் தேய்வு 01.04.2022 இல் உள்ளவாறு (ரூ.'000) | பயன்தரு ஆயுட்காலம் (வருடங்கள்) |
|---|---|---|---|
| காணி | 7 000 | — | — |
| தொழிற்சாலைக் கட்டடம் | 28 000 | 5 000 | 14 |
| உற்பத்திப் பொறிகள் | 38 000 | 4 000 | 7 |
| அலுவலக உபகரணங்கள் | 12 000 | 3 500 | 5 |
| | **85 000** | **12 500** | |

(ii), (iv), (v) ஆகிய சீராக்கங்களில் குறிப்பிடப்பட்டவை தவிர ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவுகள், அகற்றல்கள் அல்லது மீள்மதிப்பீடு எவையும் இவ்வருடத்தில் இடம்பெறவில்லை. 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான பெறுமானத் தேய்வானது நேர்கோட்டு அடிப்படையில் செய்யப்படுதல் வேண்டும். அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகளின் எஞ்சிய பெறுமதிகள் பூச்சியம் எனக் கருதுக.

(iv) வணிகத்தின் காணியானது 31.03.2023 இல் முதல் தடவை ரூ. 6 400 000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் கணக்குப் புத்தகங்களில் எப்பதிவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(v) 20.03.2023 இல் கம்பனி ரூ. 10 000 000 க்குப் புதிய உற்பத்திப் பொறியொன்றைக் கொள்வனவு செய்தது. இது உற்பத்திப் பொறிகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. 2023 மார்ச் மாதத்தில் இப் பொறியின் பொருத்துதற் கிரயம் மற்றும் ஆரம்பப் பரிசோதனைக் கிரயம் என்பன முறையே ரூ. 2 000 000 மற்றும் ரூ. 1 500 000 ஆக இருந்தது. இவ்விரு கிரய உருப்படிகளும் நிர்வாகச் செலவுகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆரம்பப் பரிசோதனைக் கிரயமானது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மூலப்பொருட் கிரயமான ரூ. 1 000 000 ஐயும் தொழில் தகமைக் கட்டணமான ரூ. 500 000 ஐயும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்பப் பரிசோதனையின்போது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை மேம்படுத்தலுக்காக இலவசமாக விநியோகிக்கப்பட்டன. இப்பொறியானது 01.04.2023 இலிருந்து பாவனைக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ளது.

(vi) கம்பனியானது 01.04.2022 இல் கட்டடமொன்றின் பாவனை உரிமையை 5 வருட காலப்பகுதிக்கு அலுவலகமாகப் பயன்படுத்துவதற்கு குத்தகை உடன்பாட்டில் பெற்றுக் கொண்டது. இக்கட்டடத்தின் பயன்தரு ஆயுட்காலமானது 25 வருடங்கள் ஆகும். குத்தகைக்கால முடிவில் இக்கட்டடத்தின் உரிமையானது கம்பனிக்கு மாற்றப்படமாட்டாது. 01.04.2022 இல் உள்ளவாறான குத்தகைத் தவணைக் கட்டணங்களின் நிகழ்காலப் பெறுமதி ரூ. 21 000 000 ஆக இருந்தது. குத்தகை உடன்பாட்டின்படி, குத்தகைக் காலப்பகுதியில் 5 சமமான ஒவ்வொன்றும் ரூ. 5 000 000 ஆன வருடாந்தத் தவணைக்கட்டணம் செலுத்தப்பட வேண்டும். முதலாவது தவணை கட்டணமானது 31.03.2023 இல் செலுத்த வேண்டியிருந்தது. எனினும், முதலாவது தவணைக் கட்டணத்தை கம்பனி உரிய திகதியில் செலுத்தத் தவறி இருந்ததுடன் அத்தொகையானது 30.06.2023 இல் செலுத்தப்பட்டிருந்தது. 31.03.2023 மற்றும் 31.03.2024 இல் முடிவடையும் வருடங்களுக்கான குத்தகை வட்டியானது முறையே ரூ 1 280 000 மற்றும் ரூ. 1 055 000 ஆக இருந்தன. இக்குத்தகை தொடர்பில் ஆரம்பக் கொடுப்பனவோ அல்லது ஆரம்ப நேர்க்கிரயமோ இல்லையெனக் கருதுக. குத்தகைத் தவணைக் கட்டணத்தின் நிகழ்காலப் பெறுமதி சொத்துப் பாவனை உரிமைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டும் குத்தகைப் பொறுப்புக் கணக்கில் செலவில் வைக்கப்பட்டும் உள்ளது. இக் குத்தகை தொடர்பில் வேறு எவ்வித கணக்குப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

[பக். 3 ஐப் பார்க்க

Scanned with CamScanner

(vii) கம்பனி பொருட்களை ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனை செய்வதுடன் 31.03.2023 இல் உள்ளவாறான உத்தரவாதத்துக்கான ஏற்பாடு ரூ. 1 150 000 ஆக மதிப்பிடப்பட்டிருந்தது. 31.03.2023 இல் முடிவடையும் வருடத்தில் உத்தரவாதத்தின் கீழ் ரூ. 600 000 பொருட்களைத் திருத்துவதற்காக செலவு செய்யப்பட்டது. இது விநியோகக் கிரயத்துள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(viii) பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள செலுத்திய வருமான வரியானது முன்னைய வருடத்துக்காகச் செலுத்திய ரூ. 450 000 ஐயும், நடைமுறை வருடத்தின் முதல் மூன்று காலாண்டுகளுக்குச் செலுத்திய வரியையும் உள்ளடக்கியுள்ளது. 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான மொத்த வருமானவரிப் பொறுப்பு ரூ. 800 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(ix) 01.04.2022 இல் உள்ளவாறான கம்பனியின் கூறப்பட்ட மூலதனமானது பங்கொன்று ரூ. 10 படி வழங்கப்பட்ட சாதாரண பங்குகளைக் கொண்டுள்ளது. கம்பனியானது 01.10.2022 இல் ஒவ்வொரு 5 பங்குகளுக்கும் 1 பங்கு என்றவாறு பங்கொன்று ரூ. 10 படி நிறுத்திவைத்த வருவாய்களை மூலதனமாக்கியது. எனினும், இது தொடர்பிலான கணக்கீட்டுப் பதிவுகள் கணக்குப் புத்தகங்களில் பதியப்பட்வில்லை. மேலும், கம்பனி 01.01.2023 இல் ரூ. 10 000 000 க்குப் பொதுப் பங்கு வழங்கல் ஒன்றை மேற்கொண்டது. இவ்வழங்கல் சரியாகக் கணக்குகளில் பதியப்பட்டுள்ளது.

(x) இயக்குநர் கட்டணம் ரூ. 1 500 000 ஆனது நிர்வாகச் செலவுகளுள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் சாதாரண பங்குதாரர்களுக்குச் செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்குலாபம் ரூ. 800 000 ஆனது ஏனைய செலவுகளுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:**

'LKAS 1 - நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்' இன்படி பிரசுரிப்பதற்குத் தேவையான வரையறுத்த பவானி பொதுக் கம்பனியின் பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புக்கள் உட்பட):

(1) 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று

(2) 31.03.2023 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று

(3) 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**2. (அ)** "லக்கி ரேடர்ஸ்" புத்தகசாலையொன்றை நடத்தி வருகின்றது. இவ்வணிகமானது மூன்று ஊழியர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளதுடன் அவர்களின் 2023 டிசெம்பர் மாதத்திற்கான சம்பளம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் இல | வாழ்க்கைச் செலவுப்படி (ரூ) | ஊழியர் கடன் கழிப்பனவுகள் (ரூ) | ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) வேலை கொள்வோர் பங்களிப்பு (ரூ) |
|---|---|---|---|
| 001 | 10 000 | 15 000 | 6 000 |
| 002 | 10 000 | — | 9 000 |
| 003 | 10 000 | 10 000 | 7 500 |

**மேலதிக தகவல்கள்:**

- ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகளுக்கான (ETF) வேலை கொள்வோர் மற்றும் ஊழியர்களுக்கான பங்களிப்புகள் பின்வருமாறு:

| | EPF | ETF |
|---|---|---|
| வேலை கொள்வோர் | 12% | 3% |
| ஊழியர் | 8% | — |

- EPF மற்றும் ETF என்பன மொத்தச் சம்பளத்தின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது.
- ஊழியர்களின் மொத்தச் சம்பளமானது அடிப்படைச் சம்பளத்தையும் படிகளையும் கொண்டுள்ளன.
- மேலே குறிப்பிட்டவைகளைத் தவிர வேறு படிகளோ அல்லது கழிப்பனவுகளோ எதுவும் இல்லை.
- குறிப்பிட்ட மாதத்திற்கான EPF மற்றும் ETF பங்களிப்புகளானவை தொடர்ந்துவரும் மாதத்தின் முதலாவது கிழமையில் அவை தொடர்பான நிதிகளிற்கு செலுத்தப்படுகிறது.

**வேண்டப்படுவது:**

2023 டிசெம்பர் மாதத்திற்கானது:

(1) ஒவ்வொரு ஊழியரின் மொத்த சம்பளம்

(2) வணிகத்தின் சம்பளப் பட்டியல்

(3) பின்வருவனவற்றைப் பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள் (விளம்பல் உட்பட)

(i) சம்பளச் செலவு

(ii) ஊழியர் கடன் கழிப்பனவுகள்

(iii) EPF பொறுப்பு

(iv) ETF பொறுப்பு

**(15 புள்ளிகள்)**

[பக். 4 ஐப் பார்க்க

Scanned with CamScanner

(ஆ) உற்பத்திக் கம்பனியொன்று 'P' மற்றும் 'Q' ஆகிய இரு பொருட்களை உற்பத்தி செய்கிறது. இக்கம்பனியானது இப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கு 'ஒருங்கிணைத்தல்' மற்றும் 'முடிவுறுத்தல்' ஆகிய இரண்டு உற்பத்திக் கிரய நிலையங்களையும், 'களஞ்சியம்' எனும் சேவைக்கிரய நிலையத்தையும் கொண்டுள்ளது. இவ் அனைத்துக் கிரய நிலையங்களும் ஒரே கட்டடத்தில் அமைந்துள்ளன.

கம்பனியால் இவ்வருடத்திற்காக பாதீடு செய்யப்பட்ட மேந்தலைகளின் அடிப்படையில் ஏற்கனவே கணிக்கப்பட்ட மேந்தலை உறிஞ்சல் விகிதங்களானது பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைத்தல் கிரய நிலையம் - இயந்திர மணித்தியாலமொன்றிற்கு ரூ. 20
- முடிவுறுத்தல் கிரய நிலையம் - நேர்ஊழிய மணித்தியாலமொன்றிற்கு ரூ. 25

மேற்படி விகிதங்களைக் கணிக்கும்போது பின்வரும் பாதீடு செய்யப்பட்ட மேந்தலைகள் கருத்திற் **கொள்ளப்படவில்லை** என பின்னர் தெரியவந்துள்ளது.

- கட்டடத்திற்கான மின்சாரக் கிரயம் ரூ. 80 000.
- கட்டடத்திற்கான பெறுமானத்தேய்வு ரூ. 200 000.
- கட்டடத்திற்கான காப்புறுதிக் கட்டணம் ரூ. 100 000.
- ஒருங்கிணைத்தல் கிரய நிலையத்தின் பராமரிப்பு கிரயம் ரூ. 20 000.

கிரய நிலையங்கள் தொடர்பான தகவல்கள்:

| | ஒருங்கிணைத்தல் | முடிவுறுத்தல் | களஞ்சியம் |
|---|---|---|---|
| தளப்பரப்பு (சதுர மீற்றர்கள்) | 6 000 | 3 000 | 1 000 |
| கிலோ வாற்ஸ் மணித்தியாலங்கள் | 2 500 | 1 000 | 500 |
| மொத்த பாதிட்ட இயந்திர மணித்தியாலங்கள் | 40 000 | 12 000 | — |
| மொத்த பாதிட்ட நேர் ஊழிய மணித்தியாலங்கள் | 6 000 | 24 000 | — |

களஞ்சியத்தின் மொத்த மேந்தலையானது ஒருங்கிணைத்தல் மற்றும் முடிவுறுத்தல் கிரய நிலையங்களுக்கிடையே முறையே 3 : 1 என்னும் விகிதத்தில் மீள் பகிரப்படுகிறது.

இவ்வருடத்தில் 'P' மற்றும் 'Q' உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியுடன் தொடர்புடைய தகவல்கள் பின்வருமாறு:

| | உற்பத்திப் பொருள் P | உற்பத்திப் பொருள் Q |
|---|---|---|
| அலகொன்றிற்கான நேர் மூலப்பொருட் கிரயம் (ரூ.) | 216 | 129 |
| அலகொன்றிற்கான நேர் ஊழியக் கிரயம் (ரூ.) | ? | ? |
| (நேர் ஊழிய மணித்தியாலமொன்றிற்கான வீதம் ரூ. 100 ஆகும்) | | |
| அலகொன்றை உற்பத்தி செய்வதற்கான உண்மையான நேர் ஊழிய மணித்தியாலங்கள் : | | |
| - ஒருங்கிணைத்தல் | 2 | 1 |
| - முடிவுறுத்தல் | 1 | 3 |
| அலகொன்றை உற்பத்தி செய்வதற்கான உண்மையான இயந்திர மணித்தியாலங்கள் : | | |
| - ஒருங்கிணைத்தல் | 2 | 3 |
| - முடிவுறுத்தல் | 1 | 2 |
| அலகொன்றிற்கான உற்பத்தியல்லா மேந்தலைகள் (ரூ) | 100 | 150 |

**வேண்டப்படுவது:**

(1) பகிர்வு அடிப்படையைத் தெளிவாகக் காட்டக்கூடியவாறு திருத்திய மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை

(2) ஒருங்கிணைத்தல் மற்றும் முடிவுறுத்தல் கிரய நிலையங்களின் திருத்திய மேந்தலை உறிஞ்சல் வீதங்கள்

(3) உற்பத்திப் பொருள் 'P' இன் அலகொன்றிற்கான மொத்த உற்பத்திக் கிரயம் மற்றும் உற்பத்திப் பொருள் 'Q' இன் அலகொன்றிற்கான மொத்தக் கிரயம்

(4) மொத்தக் கிரயத்தில் 20% இலாபமாக இருப்பின்

(i) உற்பத்திப் பொருள் 'P' இன் அலகொன்றிற்கான விற்பனை விலை

(ii) உற்பத்திப் பொருள் 'Q' இன் அலகொன்றிற்கான விற்பனை விலை

**(25 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

[பக். 5 ஐப் பார்க்க



Scanned with CamScanner

**3.** (அ) 'மாலா என்ரபிறைசஸ்' என்பது தனியுடமையாகும். அதன் 31.03.2023 இலுள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றின் சுருக்கமானது கீழே தரப்பட்டுள்ளது.

| | 31.03.2023 இலுள்ளவாறு (ரு.'000) |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கொண்டுசெல் தொகை | 3 000 |
| இருப்பு | 250 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 400 |
| காசு | 40 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **3 690** |
| உரிமையாண்மை | 2 830 |
| வங்கிக்கடன் | 800 |
| வியாபார மற்றும் ஏனைய கொடுக்குமதிகள் | 60 |
| **உரிமையாண்மையும் மொத்தப் பொறுப்புக்களும்** | **3 690** |

பின்வரும் கொடுக்கல் வாங்கல்களானது 2023 ஏப்ரல் மாதத்தில் வணிகத்தில் இடம்பெற்றுள்ளன.

| இல. | கொடுக்கல் வாங்கல் |
|---|---|
| 1 | உரிமையாளரால் மேலதிக மூலதனமாக ரு. 700 000 பெறுமதியான காணியும் ரு. 200 000 காசும் முதலீடு செய்யப்பட்டுள்ளன. |
| 2 | ரு. 1 350 000 பட்டியல் விலையுள்ள பொருட்கள் கடனிற்குக் கொள்வனவு செய்யப்பட்டன. இது தொடர்பில் ரு. 50 000 வியாபாரக் கழிவொன்று பெறப்பட்டுள்ளது. |
| 3 | ரு. 800 000 கிரயமான பொருட்களானது ரு. 1 400 000 இற்கு கடனிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. |
| 4 | வணிக பாவனைக்காக ரு. 500 000 கிரயமான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இது தொடர்பில் இத்திகதியில் ரு. 200 000 செலுத்தப்பட்டிருந்ததுடன் மிகுதியை 2023 மே மாதத்தில் செலுத்துவதற்கு இணங்கப்பட்டுள்ளது. |
| 5 | இம்மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரு. 20 000 கிரயமான பொருட்கள் விநியோகஸ்தர்களுக்கு திருப்பியனுப்பப்பட்டன. |
| 6 | இம்மாதத்தில் ரு. 50 000 இற்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் கடன்பட்டோர் ஒருவரால் திருப்பியனுப்பப்பட்டுள்ளது. இப்பொருட்களின் கிரயம் ரு. 30 000 ஆகும். |
| 7 | வங்கிக் கடனிற்கான மாதாந்த கடன் தவணைக்கட்டணம் ரு. 70 000 செலுத்தப்பட்டது. இத் தவணைக்கட்டணமானது ரு. 15 000 வட்டியையும் உள்ளடக்கியுள்ளது. |
| 8 | வணிகத்தின் ரு. 900 000 கொண்டு செல் தொகையுடைய காணியொன்று ரு. 1 600 000 காசிற்கு விற்பனை செய்யப்பட்டது. |
| 9 | 10% கழிவினை அனுமதித்ததன் பின்னர் வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து ரு. 900 000 காசு பெறப்பட்டது. |
| 10 | ரு. 500 000 கிரயமான பொருட்கள் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 11 | வணிகத்திடமிருந்து ரு. 60 000 கிரயமான பொருட்களை உரிமையாளர் தனது சொந்தப் பாவனைக்காகப் பெற்றுள்ளார். |
| 12 | வியாபாரக் கடன்கொடுத்தோர் ஒருவருக்கு கொடுக்குமதியான ரு. 300 000 ஆனது ரு. 50 000 கழிவுடன் தீர்க்கப்பட்டுள்ளது. |
| 13 | ரு. 100 000 கிரயமான இருப்புக்கள் அழிவடைந்துள்ளன. இந்நட்டத்தின் 80% இனை காப்புறுதிக் கம்பனி தருவதாக இணங்கியுள்ளது. |
| 14 | 2023 ஏப்ரல் மாதத்திற்கான ரு. 500 000 செயற்பாட்டுச் செலவுகள் செலுத்தப்பட்டுள்ளது. |
| 15 | 2023 ஏப்ரல் மாதத்திற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கான பெறுமானத்தேய்வு ரு. 20 000 இற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |

**வேண்டப்படுவது:**

(1) 01.04.2023 இலுள்ளவாறான மீதிகளைப் பதிவு செய்வதுடன் கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 15 வரைக்கான கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தினை (பெறுமதியுடன்) காட்டுக. பெறுமதி அதிகரிக்குமாயின் (+) எனவும் பெறுமதி குறைவடையுமாயின் (–) எனவும் அந்தந்தப் பெறுமதிகளுக்கு எதிரே குறிப்பிடுக. (இவ்வினாவிற்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்துக).

[பக். 6 ஐப் பார்க்க

001962

01030000120111962

Scanned with CamScanner

(ரு. '000)

| மீதி / கொடுக்கல் வாங்கல் இல. | சொத்துக்கள் | | | = | பொறுப்புக்கள் + | | உரிமையாண்மை |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | இருப்பு | வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | காசு | வங்கிக் கடன் | வியாபார மற்றும் ஏனைய கொடுக்கு மதிகள் | |
| 01.04.2023 இல் மீதி | | | | | | | |
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |
| ---- | | | | | | | |
| ---- | | | | | | | |
| 30.04.2023 இல் மீதி | | | | | | | |

(2) தேறிய சொத்து அடிப்படையைப் பயன்படுத்தி 30.04.2023 இல் முடிவடையும் மாதத்திற்கான இலாபம் அல்லது நட்டம் **(30 புள்ளிகள்)**

**(ஆ)** ஒரு பாடசாலையின் பழைய மாணவர் சங்கமொன்றின் பிரதான நோக்கமானது நிதி இடர்பாடுகளையுடைய மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்களை வழங்குவதாகும். இச் சங்கத்துடன் தொடர்புடைய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**நிதி நிலைமைக் கூற்று:**

| | 31.12.2023 இல் உள்ளவாறு (ரு.'000) | 01.01.2023 இல் உள்ளவாறு (ரு.'000) |
|---|---|---|
| அலுவலக உபகரணங்கள் - கொண்டு செல்தொகை | 2 750 | 500 |
| நிலையான வைப்பு | 6 000 | — |
| பெறவேண்டிய சந்தாக்கள் | 500 | 600 |
| இசை நிகழ்ச்சி அனுசரணையாளர்களிடமிருந்து பெறவேண்டிய காசு | 600 | — |
| நிலையான வைப்பிலிருந்து பெறவேண்டிய வட்டிவருமானம் | 100 | — |
| காசு | 1 025 | 2 500 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **10 975** | **3 600** |
| திரண்ட நிதி | ? | 2 700 |
| புலமைப்பரிசில் நிதி | ? | 450 |
| முற்பணமாகப் பெற்ற சந்தா | 550 | 450 |
| **உரிமையாண்மையும் மொத்த பொறுப்புக்களும்** | **10 975** | **3 600** |

**31.12.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கு:**

| | ரு.'000 | ரு.'000 |
|---|---|---|
| 01.01.2023 இல் உள்ளவாறான காசு மீதி | | 2 500 |
| **பெறுவனவுகள் :** | | |
| சந்தாக்கள் | 1 500 | |
| புலமைப்பரிசில்களுக்கான நன்கொடைகள் | 6 300 | |
| இசை நிகழ்ச்சிக்கான அனுமதிச்சீட்டு விற்பனையிலிருந்தான பெறுவனவுகள் | 1 100 | |
| இசை நிகழ்ச்சிக்கான அனுசரணையாளர்களிடமிருந்து பெறப்பட்ட காசு | 400 | |
| நிலையான வைப்பிலிருந்து பெறப்பட்ட வட்டி | 800 | 10 100 |
| **கொடுப்பனவுகள் :** | | |
| புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் | 1 800 | |
| அலுவலகச் செலவுகள் | 575 | |
| இசை நிகழ்ச்சிச் செலவுகள் | 700 | |
| அலுவலக உபகரணக் கொள்வனவு | 2 500 | |
| 01.04.2023 இல் திறக்கப்பட்ட நிலையான வைப்பு (2 வருடங்கள்) | 6 000 | 11 575 |
| 31.12.2023 இல் உள்ளவாறான காசு மீதி | | 1 025 |

[பக். 7 ஐப் பார்க்க



Scanned with CamScanner

**மேலதிக தகவல்கள்:**

- புலமைப்பரிசில்கள் வழங்குவதற்காக வருடமொன்றில் பெறப்பட்ட நன்கொடைகள் புலமைப்பரிசு நிதிக் கணக்கில் செலவு வைக்கப்படுகின்றன. ஒரு வருடத்துக்கான புலமைப்பரிசில்களை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் நன்கொடைகளுக்குச் சமனான தொகையை அவ் வருடத்துக்கான வருமானமாக இனங்காண்பது சங்கத்தின் கணக்கீட்டுக் கொள்கையாகும்.
- இவ்வருடத்தில் அலுவலக உபகரணங்களின் அகற்றல்கள் எதுவும் இடம்பெறவில்லை.
- நிலையான வைப்பின் வருடாந்த வட்டி வீதம் 20% ஆகும்.

**வேண்டப்படுவது:**

(1) 31.12.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான பழைய மாணவர் சங்கத்தின் புலமைப்பரிசில் நிதிக் கணக்கு

(2) 31.12.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான பழைய மாணவர் சங்கத்தின் வருமானக்கூற்று

(3) 31.12.2023 இல் உள்ளவாறான திரண்ட நிதியின் மீதி

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**4.** (அ) வரையறுத்த சுகந்தி (PVT) கம்பனி ஆனது மொத்த வியாபாரமொன்றை நடத்துகின்றது. இக்கம்பனியானது பொருட்களை கடன் அடிப்படையில் மட்டும் கொள்வனவு செய்வதுடன் கடன் அடிப்படையிலும் காசுக்கும் விற்பனை செய்கிறது. இக்கம்பனியானது பெறுமதி சேர்வரி (VAT) இற்காக பதிவு செய்யப்பட்டுள்ளது.

பின்வரும் தகவல்கள் 2023 டிசெம்பர் மாதத்துடன் தொடர்புடையவையாகும் :

(i) கம்பனியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீதிகள் :

| | 31.12.2023 இல் உள்ளவாறு (ரூ.'000) | 01.12.2023 இல் உள்ளவாறு (ரூ.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கொண்டுசெல் தொகை | 1 310 | 1 100 |
| காசு | ? | 150 |
| இருப்பு | 300 | 200 |
| வியாபாரக் கடன்பட்டோர் | ? | 300 |
| வியாபாரக் கடன் கொடுத்தோர் | ? | 240 |
| VAT கட்டுப்பாட்டுக் கணக்கு - செலவு மீதி | ? | 100 |
| செல்மதி செலவுகள் | 60 | 40 |

(ii) 01.12.2023 இலுள்ளவாறான வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் வியாபாரக் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளானது அவற்றின் துணைப் பேரேட்டு கணக்குகள் மீதிகளுடன் அத்திகதியில் சமப்பட்டுள்ளன.

(iii) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தொர் துணைப்பேரேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட 2023 டிசெம்பர் மாதத்திற்கான வியாபாரக் கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு இருந்தன.

| விபரம் | வியாபாரக் கடன்பட்டோர் (ரூ.'000) | | |
|---|---|---|---|
| | அமலன் | விமலன் | சர்மிலன் |
| 01.12.2023 இலுள்ளவாறு மீதி | 100 | 50 | 150 |
| விற்பனைகள் 15% VAT உட்பட | 345 | 460 | 575 |
| காசுப் பெறுவனவுகள் | 350 | 450 | 500 |
| அனுமதித்த கழிவு | — | 25 | 50 |

| விபரம் | வியாபாரக் கடன்கொடுத்தோர் (ரூ.'000) | | |
|---|---|---|---|
| | நிலா | மாலா | துசாரா |
| 01.12.2023 இலுள்ளவாவாறு மீதி | 80 | 60 | 100 |
| கொள்வனவுகள் 15% VAT உட்பட | 575 | 690 | 345 |
| காசுக் கொடுப்பனவுகள் | 500 | 600 | 250 |
| பெற்ற கழிவு | 25 | 30 | — |

[பக். 8 ஐப் பார்க்க

Scanned with CamScanner

(iv) 2023 டிசெம்பர் மாதத்தில் இடம்பெற்ற ஏனைய கொடுக்கல் வாங்கல்கள்:

- காசு விற்பனைகள் ரூ. 920 000 ஆக இருந்தன (15% VAT உட்பட).
- இம்மாதத்திற்கு ஏற்பட்ட செயற்பாட்டுச் செலவானது ரூ. 90 000 பெறுமானத் தேய்வு செலவு உட்பட ரூ. 350 000 ஆக இருந்தது.
- ரூ. 300 000 கிரயமான தளபாடங்கள் காசிற்கு கொள்வனவு செய்யப்பட்டன (VAT ஐ புறக்கணிக்குக).

(v) திகதிகள் குறிப்பிடப்படாத போதிலும் மேற்படி அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் டிசெம்பர் மாதத்தில் வெவ்வேறு திகதிகளில் இடம்பெற்றுள்ளதெனக் கருதுக.

**வேண்டப்படுவது:**

(1) 2023 டிசெம்பர் மாதத்துக்கான பின்வரும் மூலப்பதிவேடுகள்:

(i) காசுப் பொறுவனவு நாளேடு (ii) காசுக் கொடுப்பனவு நாளேடு

(iii) விற்பனை நாளேடு (iv) கொள்வனவு நாளேடு

(2) 2023 டிசெம்பர் மாதத்துக்கான பின்வரும் பேரேட்டுக் கணக்குகள்:

(i) காசுக் கணக்கு

(ii) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

(iii) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

(iv) VAT கட்டுப்பாட்டுக் கணக்கு **(30 புள்ளிகள்)**

**(ஆ)** TDK வைத்தியசாலையானது அதன் பழைய கதிரியக்க இயந்திரத்தைப் புதிய கதிரியக்க இயந்திரம் ஒன்றுடன் பிரதியீடு செய்யும் செயற்றிட்டமொன்றைக் கருத்திற் கொள்கின்றது. இப்புதிய கதிரியக்க இயந்திரத்தின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். புதிய கதிரியக்க இயந்திரத்தின் தொழினுட்ப முன்னேற்றம் காரணமாகக் கம்பனியின் செயற்பாட்டு இயலளவு அதிகரிக்கும் எனவும், வருடாந்தச் செயற்பாட்டுச் செலவுகள் குறைவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்படுமாயின் பழைய இயந்திரமானது அதன் நடைமுறைச் சந்தை விலையில் விற்பனை செய்யப்படலாம்.

இது தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ. ’000 |
|---|---|
| **பழைய கதிரியக்க இயந்திரம்:** | |
| நடைமுறைச் சந்தை விலை | 2 000 |
| அகற்றல் செலவுகள் | 200 |
| **புதிய கதிரியக்க இயந்திரம்:** | |
| கொள்வனவு விலை | 15 000 |
| கொண்டு செல்லல் மற்றும் பொருத்துதற் கிரயம் | 300 |
| மேலதிக தொழிற்படு மூலதனத் தேவைப்பாடு (இத் தொகையானது எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்கால முடிவில் மீளப் பெறப்பட முடியும்) | 500 |
| எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்கால முடிவில் எஞ்சிய பெறுமதி | 3 000 |
| காசாகச் செலுத்த வேண்டியுள்ள வருடாந்தச் செயற்பாட்டுச் செலவுகளிலான சேமிப்புக்கள் | 500 |
| வருடாந்த வருவாய் மீதான அதிகரிப்பு | 3 500 |

செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வீதம் 10% ஆகும். இதன் கழிவீட்டுக் காரணிகள் வருமாறு:

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கழிவீட்டுக் காரணி (இரு தசமதானத்துக்குக் கிட்டியது) | 0.91 | 0.83 | 0.75 | 0.68 | 0.62 |

**வேண்டப்படுவது:**

(1) ஒவ்வொரு காசுப்பாய்ச்சல் உருப்படியையும் தனித் தனியாகக் காட்டக் கூடியவாறு செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட வருடாந்தக் காசு உட்பாய்ச்சல்களும் காசு வெளிப்பாய்ச்சல்களும்

(2) செயற்றிடத்தின் திரும்பப் பெறும் காலம் (வருடங்கள்)

(3) செயற்றிட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி (NPV)

(4) தேறிய நிகழ்காலப் பெறுமதியின் அடிப்படையில் புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கான சிபாரிசு.

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

[பக். 9 ஐப் பார்க்க

Scanned with CamScanner

5. (அ) இராமனும் சீதையும் வணிக ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்காக 01.04.2022 இல் பங்குடமை வணிகமொன்றை ஆரம்பித்தனர்.

(i) பங்குடமை ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் பின்வருமாறு:

- **பங்குடைமையின் இலாபம் அல்லது நட்டத்தைப் பகிர்வதற்கான நிபந்தனைகள்:**

| | | |
|---|---|---|
| பங்காளர்களுக்கான மாதச் சம்பளம் | - இராமன் | ரூ. 50 000 |
| | - சீதை | ரூ. 40 000 |
| வருட ஆரம்ப மூலதன மீதிக்கு வட்டி | | வருடத்துக்கு 10% |
| இலாபம் அல்லது நட்டப் பகிர்வு விகிதம் | | சமமானது |

- **ஏனைய நிபந்தனைகள்:**

பங்காளர்களால் வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி வருடத்துக்கு 20%

(ii) பங்காளர்களால் வழங்கப்பட்ட மூலதனத்தின் சுருக்கம் மற்றும் 31.03.2023 இல் முடிவடையும் வருடத்தில் பங்குடமையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- 01.04.2022 இல் பங்காளர்களால் வழங்கப்பட்ட மூலதனம்:

| | காசு (ரூ.'000) | நடைமுறையல்லாச் சொத்துக்கள் (ரூ.'000) | மொத்தம் (ரூ.'000) |
|---|---|---|---|
| இராமன் | 2 400 | 2 600 | 5 000 |
| சீதை | 1 800 | 2 200 | 4 000 |

- 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான கணக்குப் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள்:

| | (ரூ.'000) |
|---|---|
| ஆலோசனைச் சேவை வருமானம் | 10 000 |
| ஆலோசனைச் சேவைச் செலவுகள் | 6 000 |
| ஏனைய செலவுகள் (பெறுமானத்தேய்வு உட்பட) | 1 000 |

- பங்காளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்:

— இராமன் பங்குடமையால் வழங்கப்பட்ட ஆலோசனைச் சேவையொன்றிற்காக ரூ. 100 000 ஐ அவரது தனிப்பட்ட கணக்குக்குப் பெற்றுக் கொண்டார். மேலும், இவ்வாலோசனை தொடர்பான கிரயம் ரூ. 60 000 ஆனது அவரது தனிப்பட்ட கணக்கிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. இக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பங்குடமையின் கணக்குப் புத்தகங்களில் பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

— இவ்வருடத்தில் இராமன் ரூ. 200 000 காசை பற்றுக்களாக எடுத்துக்கொண்டார்.

— சீதையின் வருடாந்தச் சம்பளம் காசாகச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், இது தவறுதலாக ஆலோசனைச் சேவைச் செலவுகளாகப் பதியப்பட்டுள்ளது.

— பங்குடமையானது 01.04.2022 இல் இராமனுக்குச் சொந்தமான கட்டடமொன்றை வாடகைக்குப் பெற்றுக் கொண்டது. இதற்கான மாதாந்த வாடகை ரூ. 30 000 ஆகும். வருட வாடகையானது செலுத்தப்படவோ அல்லது பதியப்படவோ இல்லை. 31.03.2023 இல் செலுத்தப்பட வேண்டிய மொத்த வாடகையை அவரால் பங்குடமைக்கு வழங்கப்பட்ட மேலதிக மூலதனமாகக் கருதுமாறு இராமன் ஆலோசனை வழங்கினார். சீதா அதனை ஏற்றுக் கொண்டனர்.

— 01.10.2022 இல் சீதை ரூ. 1 000 000 ஐப் பங்குடமைக்கு கடனாக வழங்கினார். எனினும் இது தொடர்பான வட்டியானது செலுத்தப்படவோ அல்லது பதியப்படவோ இல்லை.

(iii) புதிய பங்காளரை சேர்த்துக்கொள்ளல் :

31.03.2023 இல் கஜபா என்பவர் புதிய பங்காளராக சேர்க்கப்பட்டுள்ளார். இத்திகதியில் பங்குடமையின் நன்மதிப்பானது ரூ. 1 800 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. கஜபா தனது மூலதனமாகவும் அவரது நன்மதிப்பின் பங்காகவும் காசாக ரூ. 4 600 000 ஐக் கொண்டு வந்தார். பங்குடமையின் நன்மதிப்பானது பங்காளர் மூலதனக் கணக்குகளினூடாகச் சீராக்கப்படுகின்றது. அனைத்துப் பங்காளர்களும் இலாபங்கள் அல்லது நட்டங்களை சமனாகப் பகிர்வதற்கு இணங்கினர்.

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான பங்குடமையின் வருமானக்கூற்று (பங்காளருக்கான பகிர்வுகள் உட்பட)

(2) 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் மற்றும் நடைமுறைக் கணக்குகள்.

**(25 புள்ளிகள்)**

[பக். 10 ஐப் பார்க்க

Scanned with CamScanner

(ஆ) உற்பத்திக் கம்பனியான வரையறுத்த விமல் பொதுக்கம்பனியுடன் தொடர்புடைய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கானது (ரூ.'மில்லியன்) | |
|---|---|
| வருவாய் | 600 |
| விற்பனைக் கிரயம் | 360 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 100 |
| வட்டிச் செலவு | 20 |
| வருமான வரிச் செலவு | 30 |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 90 |

| 31.03.2023 இல் உள்ளவாறு (ரூ.'மில்லியன்) | |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கொண்டு செல் தொகை | 300 |
| இருப்புக்கள் | 200 |
| வியாபார வருமதிகள் | 150 |
| காசு | 100 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **750** |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | 300 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 100 |
| நீண்டகாலக் கடன் | 250 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | 100 |
| **உரிமையாண்மையும் மொத்தப் பொறுப்புகளும்** | **750** |

**மேலதிக தகவல்கள் :**

- 31.03.2023 இல் முடிவடையும் வருடத்தில் கம்பனியானது இடைக்காலப் பங்குலாபமாக ரூ. 50 மில்லியனைச் செலுத்தியிருந்தது.
- 31.03.2023 இல் உள்ளவாறு சாதாரண பங்குகளின் எண்ணிக்கை 25 மில்லியனாக இருந்தது. கம்பனியானது நடப்பு வருடத்தில் புதிய பங்குகளெதையும் வழங்கவில்லை.
- கீழே தரப்பட்டுள்ள விகிதங்களானது வரையறுத்த விமல் பொதுக்கம்பனியின் போட்டிக் கம்பனியான வரையறுத்த நிஹால் பொதுக் கம்பனியுடன் தொடர்பானவை.
  - தேறிய இலாப விகிதம் 21%
  - உரிமையாண்மை மீதான வருவாய் விகிதம் 19%
  - உரிமையாண்மைக்கு கடன் விகிதம் 65%
  - பங்கொன்றிற்கான உழைப்பு ரூ. 3.75
  - பங்கொன்றிற்கான பங்குலாபம் ரூ. 2.50
  - வட்டிக்காப்பு விகிதம் 10 தடவைகள்

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான வரையறுத்த விமல் பொதுக்கம்பனியின் பின்வரும் விகிதங்கள்.

(i) தேறிய இலாப விகிதம்
(ii) உரிமையாண்மை மீதான வருவாய் விகிதம்
(iii) உரிமையாண்மைக்கு கடன் விகிதம்
(iv) பங்கொன்றிற்கான உழைப்பு
(v) பங்கொன்றிற்கான பங்குலாபம்
(vi) வட்டிக்காப்பு விகிதம்

(2) மேற்படி (1) இல் கணிக்கப்பட்டுள்ள விகிதங்களை வரையறுத்த நிஹால் பொதுக்கம்பனியின் விகிதங்களுடன் ஒப்பீடு செய்து பின்வருவனவற்றை அடையாளங் காண்க.

(i) விற்பனைகளில் உயர் வருவாயை உருவாக்கும் கம்பனி நிஹால்
(ii) உயர்மட்ட இணைப்பைக் கொண்ட கம்பனி விமல்
(iii) சாதாரண பங்குதாரர்களுக்கு அதிக இலாபத் தொகையை வழங்கும் கம்பனி விமல்

**(15 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

[பக். 11 ஐப் பார்க்க



Scanned with CamScanner

**6. (அ)** நிமலன் PLC இன் 31.03.2023 இல் முடிவடையும் வருடத்திற்கான சுருக்கிய காசுக்கணக்கு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

**காசுக் கணக்கு (ரு.'000)**

**வரவு** **செலவு**

| | | | |
|---|---|---|---|
| 01.04.2022 இல் மீதி | 650 | கொள்வனவுகள் | 2 500 |
| விற்பனைகள் | 3 500 | வியாபாரக் கடன்கொடுத்தோர் | 5 000 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 4 750 | செயற்பாட்டுச் செலவுகள் | 1 600 |
| வங்கிக்கடன் | 8 500 | வங்கிக்கடன் (கடன் மீள்கொடுப்பனவும் வட்டியும்) | 3 450 |
| பங்குகள் வழங்கல் | 4 000 | அலுவலக உபகரணங்கள் | 13 500 |
| மோட்டார் வாகன அகற்றல் | 5 800 | வருமானவரி | 900 |
| | | 31.03.2023 இல் மீதி | 250 |
| | 27 200 | | 27 200 |

**மேலதிக தகவல்கள் :**

(i) 31.03.2023 இல் முடிவடையும் வருடத்திற்கான வரிக்குப் பின்னரான இலாபம் ரு. 4 550 000 ஆகும்.

(ii) 31.03.2023 இல் முடிவடையும் வருடத்திற்கான கடன் விற்பனையானது காசு விற்பனைகளின் இரண்டு மடங்கிற்குச் சமமாகும்.

(iii) 31.03.2023 இல் முடிவடையும் வருடத்திற்கான கடன் கொள்வனவுகள் ரு. 3 000 000 ஆக இருந்தது.

(iv) அகற்றப்பட்ட மோட்டார் வாகனத்தின் கொண்டு செல் தொகையானது ரு. 3 500 000 ஆகும்.

(v) 31.03.2023 மற்றும் 31.03.2022 இலுள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமைக் கூற்றுகளின் சுருக்கம்:

| | 31.03.2023 இல் உள்ளவாறு (ரு.'000) | 31.03.2022 இல் உள்ளவாறு (ரு.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்-கொண்டுசெல்தொகை.... | 25 950 | 16 750 |
| இருப்புக்கள் ............ | 2 500 | 1 200 |
| வியாபாரப் வருமதிகள் ............ | ? | 1 650 |
| காசும் காசிற்குச் சமனானவையும் ............ | 250 | 650 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் ............ | 3 000 | ? |
| செல்மதி வங்கிக்கடன் வட்டி ............ | 200 | 150 |
| கொடுக்குமதியான வருமானவரி ............ | 600 | 350 |
| வங்கிக் கடன் ............ | 15 500 | 10 000 |
| மொத்த உரிமையாண்மை ............ | 13 300 | 4 750 |

**வேண்டப்படுவது :**

'LKAS 7 - காசுப்பாய்ச்சல் கூற்று' இன்படி 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான நிமலன் PLC இன் காசுப்பாய்ச்சல் கூற்று (செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சலினைக் காட்டுவதற்கு நேரில் முறையினைப் பயன்படுத்துக).

**( 20 புள்ளிகள்)**

Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! nScanner

(ஆ) கொழும்பிலுள்ள பயண முகவர் ஒருவர் யாழ்ப்பாணத்திலுள்ள வரலாற்று பிரசித்திபெற்ற இடங்களைப் பார்வையிடுவதற்கான மூன்று நாள் பயணத்தினை ஒழுங்கு செய்கிறார். ஒரு பயணத்திற்கு ஆகக் கூடுதலாக போகக் கூடியவர்களின் எண்ணிக்கை 10 ஆகும். பயண முகவர் ஒவ்வொரு பயணத்திற்குமான மொத்தக் கிரயத்தின் அடிப்படையில் பயணிப்போரிடமிருந்து கட்டணத்தை அறவிடுகிறார். பிரயாணமொன்றிற்கான சேவைகளை வழங்குவதற்கு பயண முகவரால் பின்வரும் கிரயங்கள் மதிப்பிடப்பட்டுள்ளன.

| கிரய உருப்படி | கட்டணம் |
|---|---|
| • கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் திரும்ப வருவதற்குமான ரயில் அனுமதிச்சீட்டுக் கட்டணம் | நபர் ஒருவருக்கு ரூ. 7 000 |
| • முழுப் பயணத்திற்குமான தங்குமிடக் கிரயம் | நபர் ஒருவருக்கு ரூ. 30 000 |
| • வரலாற்று பிரசித்திபெற்ற இடங்களைப் பார்வையிடுவதற்கு வாகனத்திற்கான வாடகைக் கிரயம் | ரூ. 55 000 |
| • வரலாற்று பிரசித்திபெற்ற இடங்களுள் நுழைவதற்கான கட்டணங்கள் | நபர் ஒருவருக்கு ரூ. 5 000 |
| • முழுப் பயணத்திற்குமான சப்பாட்டுச் செலவுகள் | நபர் ஒருவருக்கு ரூ. 10 000 |
| • முழுப் பயணத்திற்குமான பிரயாண வழிகாட்டியின் கட்டணம் | ரூ. 10 000 |
| • யாழ்ப்பாணத்தைச் சூழவுள்ள தீவுகளைப் பார்வையிடுவதற்கு பயன்படுத்தப்படும் படகிற்கான வாடகைக் கட்டணம் | ரூ. 15 000 |
| • நாணாவித செலவுகள் | நபர் ஒருவருக்கு ரூ. 3 000 |

வாகனத்தினதும் படகினதும் இருக்கைகளின் எண்ணிக்கை ஒவ்வொன்றிலும் 10 இருக்கைகளாகும்.

**வேண்டப்படுவது :**

(1) ஒரு பயணத்திற்கான மொத்த நிலையான கிரயம்

(2) நபர் ஒருவருக்குக்கான மாறும் கிரயம்

(3) பயண முகவர் நபர் ஒருவரிடமிருந்து ரூ. 71 000 அறவிடுவாராயின் பயணத்தின் மொத்தக் கிரயத்தை ஈடு செய்வதற்குத் தேவைப்படும் பயணிகளின் எண்ணிக்கை

(4) பயணமொன்றில் **நான்கு** பேர் இணைந்து கொள்வார்களாயின்:

(i) பயணத்திற்கான மொத்தக் கிரயத்தை ஈடுசெய்வதற்கு பயண முகவரால் நபர் ஒருவரிடமிருந்து அறவிடவேண்டிய கட்டணம்

(ii) நபரொருவருக்கான பங்களிப்பு

(iii) பயணமொன்றிலிருந்து ரூ. 20 000 இலாபத்தினை பயண முகவர் எதிர்பார்ப்பாராயின் நபர் ஒருவரிடமிருந்து அறவிடவேண்டிய கட்டணம்

**( 20 புள்ளிகள்)**

**( மொத்தம் 40 புள்ளிகள்)**

* * *

PAST PAPERS WIKI

(24) WWW.PastPapers.WiKi (24)

Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! nScanner